கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசுஸு ஐப்பசிமீ [பகுதி-கஉ.

## இரட்டையர்.

இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் எனப்பட்ட பெருங்கவிப்பு லவர்கள் எனவும் திருவக்கையிலிருந்த ஆட்கோண்டான் எனப்பெய ரிய கோங்கராயன் காலத்திருந்தவர்கள் எனவும் அக்கொங்கராயனு லும் கச்சியிலிருந்த சம்பராயனுலும் நன்றுபோற்றப்பட்டவர்கள் எ னவும் திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடினர்கள் எனவும் திருவண் ணுமலைச் சம்பந்தன் சொன்ன சமுத்திபாடினர்களெனவும் ஆறுவில கப் பாடினர்களெனவும் வறுமைமிகுத்துக் குன்றும்வனமுங்கடந்து போய்ப் பலர்பிறரைப் புகழ்ந்துபாடி வாணுள்கழித்தனர்கள் எனவும் தமிழ்நாவலர் சரிதையால் அறியலாவன. 'கலம்பகத்திற் கிரட்டை யர்கள்' எனப்பிற்காலத்தார் பாடியது, இவர்களியற்றிய ஆமாத்தூர் க்கலம்பகம்பற்றியேயாமெனத் தோன்றுகின்றது. இவர்களில் ஒரு வர் முடவரும் ஒருவர் குருடருமாயிருந்தனர் எனவும் குருடர் முட வரைத்தூக்க முடவர் குருடர்க்கு வழியுணர்த்தச் செல்வார்களென வும் ஒருசெய்யுளை ஒருவர்பாதியும் மற்றொருவர் பாதியுமாகப் பாடி முடிப்பார்கள் எனவுங்கூறுவர்.

இனி வில்லிபுத்தூரர் மகனர் வரந்தருவார் பாடிய பாரதச்சிற ப்புப் பாயிரத்தில்,

தார காயண வண்டலை தண்டலைச் சனியூர்
வீர ராகவ னருள்பெறு வில்லிபுத் தூர
னூர ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித்
தீர காகளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன்,

எங்குமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்தநாட்டிற்
கோங்கர்குலவரபதியாட்கோண்டானென்றொருவண்மைக்குரிசிறோன்றி
வெங்கலியின்மூழ்காமற்கருநடப்பேர்வெள்ளத்துவிழாமனுன்காஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே.

ஆற்றியமெய்ச்செல்வத்தாலளகையைவென்றிருங்கவிஞலமாரூரை
மாற்றியபொற்றடமதில்சூழ்வக்கபாகையினறத்தின்வடிவம்போலத்
தோற்றியவக்கோங்கர்பிரான்சூழ்தமிழினுட்கோண்டான்சுற்றத்தோடு
போற்றியவிப்புவிமுழுதுந்தன்றிருப்பேர்மொழிகொண்டேபுரந்தானம்மா.

பிறந்துய்யக்கொண்டவனிப்பேருலகம்பெருவாழ்வுகூருநாளி
ணிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ்வில்லிபுத்தூரனைநோக்கிநீயுநானும்
பிறந்ததிசைக்கிசைநிற்பப்பாரதமாம் பெருங்கதையைப்பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத்தமிழ்மொழியின்விருத்தத்தாற்செய்கவென்றான்

எனவருதலால் வக்கபாகையிற் கொங்கர்குலபதியாய் வந்த ஆட்கோண்டான் என்னும் வள்ளல் சனியூர்வில்லிபுத்தூரரைப் பாரதவிருத்தம் பாடுமாறுவேண்டினன் என்பதுஅறியப்படுகின்றது. தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படும் வக்கைநகர் இவ்வக்கபாகையேயாமென்பதும் ஆண்டு ஆட்கொண்டநாயன், கொங்கர்கோன் எனப்பாடப்படுவானும் இக்கொங்கர்குலபதியாகிய ஆட்கொண்டானே என்பதும் பெயரொற்றுமைபற்றி எளிதிலறியப்படும்.

இதனல் பாரத விருத்தம்பாடிய வில்லிபுத்தூரரும், இரட்டையரும் ஒரு காலத்தவர்களாதல் நன்கு தெளியப்படும்.

## தமிழ் நாவலர் சரிதை.

### இரட்டையர் திருவக்கைக் கொங்கராயன் அசனம் இடுவித்த போது பாடிய கவி.

சாணர்க்கு முன்னிற்கு மாட்கோண்டநாயன் றமிழ்க்கோங்கர்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே [கோன்
பூணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்னுக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே.

சாணர்—சதுரர். விழுப்புண்பட்ட தழும்புடைமைபற்றி வீரர்எனினு மமையும். சாணம்—தழும்பு.

## திருவண்ணுமலைச் சம்பந்தன் சமுத்தி பாடச்சொன்னபோது பாடியது.

மன்னுதிரு வண்ணு மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவாம் பண்ணுவதென்—மின்னி
னிளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

## சம்பராஜன் விகடசமுத்தி பாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம் பரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னுள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே.

## படைவீடு மூற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்ரு லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து
மேற்ரு னெடுத்து வளைத்தெய்து—மாற்ருத
சொம்பொன் மலையில்லைச் சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

## ஆறுவிலகிய பாட்டு.

*ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகிநின் ருர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.

## திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச்சொன்னபோது பாடியது.

†தொல்காப் பியதேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் ‡பொருளழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே.

---

* ஆற்குழை - ஆலந்தளிர்.

† தொல்காப்பியதேவர் - இவரொரு புலவர்.

‡ பொருளழற்கும் - பிள்ளையழுதற்கும்.

காட்டுவழியிற் போகும்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடை கூறியது.

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—வொன்றுங்
கொடாதாரைச் *சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னு
விடாதோ வதுவே யிது.

பத்திராசிரியர்.

---

# இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்.

## ஆற்றுப்படலம்.

மல்கிய கேகயன் மடந்தை வாசக
நல்கிய தரிவையர் நடுவிற் கேகொலாம்
புல்கிய மலர்வடம் பூண்கி லாமையா
லொல்கிய வொருவகை பொறையு யிர்க்கவே.

என்னும் ௪௧-ம் செய்யுளில், 'ஒல்கிய வொருவகை பொறையு யிர்க்கவே' என்பது 'ஒல்கிய தொருவகை பொறையு யிர்த்ததே' எனக்காணப்படுகின்றது. 'பொறையு யிர்க்கவே' எனக்கொள்ளுமிடத்து முடிபின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. வலிந்து முடித்தல் இத்துணைச் சிறப்பின்று என்க.

## கிளைகண்டு நீங்குபடலம்.

ஆய காதலொ டையனைக் கொண்டுதன்
தூய சாலை புறைவிடந் துன்னினன்
மேய சேனைக் கமைப்பென் விருந்தெனத்
தீயி னுவுதி செங்கையி னீக்கினன்.

என்னும் ௯-ம் செய்யுளில், 'தீயினுவுதி செங்கையி னீக்கினன்' என்பது 'தீயினுகுதிச் செல்வனுஞ்சிந்தித்தான்' எனக்காணப்படுகின்றது. 'தீயினுவுதி செங்கையினீக்கினன்' என்பது பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. வருஞ்செய்யுளில் 'கினைய' வென்பதற்கும் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க.

---

* சங்கநிதியென்றும், காமதேநுவென்றும்.

ஷ

கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்தன னலத்து நீங்கினள்
வேதனைத் திருமகண் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது தோன்றினன்.

என்னும் ௫௨-ம் செய்யுளில் 'நாதனைப்பிரிந்தன னலத்து நீங்கினள் வேதனைத்திருமகள்' என்பது 'நாதனைப்பிரிந்துதன் னலத்து நீங்கிய-வேதனைப்பூமகள்' எனக்காணப்படுகின்றது.

பிரிந்தவள் பூமகளாதலின் 'பூமகள்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. பரதன் ஸ்ரீராமபிரானை அழைத்துவரும்பட்டி காடுசென்றதும் அரசுசெய்வித்தற்பொருட்டே யாதலிற் பின்னையதே பொருத்த முடைத்தாதல் காண்க.

ஷ

வரதன் றுஞ்சினன் வைய மாணையாற்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனப் பரிந்து கூறினன்.

என்னும் ௬௬-வது செய்யுளில் 'விரதவேடநீ யென்கொல் வேண்டுவான்' என்பது 'விரதவேடநீ யென்கொன் மேவினாய்' எனக்காணப்படுகின்றது. 'வேண்டுவான்' என்பது பொருள் கொள்ளுமிடத்து முடிபுஞ் சிறப்பு மின்மையின் 'மேவினாய்' என்பதே சிறப்புடைத்தாதல் காண்க.

ஷ

மனக்கொன் றுதன வரத்தி னின்னையு
நினக்கொன் றுநிலை நிறுவி நேமியான்
றனைக்கொன் றுடருந் தனைய னுதலா
லெனக்கொன் றுதவ மடுப்ப தெண்ணினால்.

என்னும் ௬௮-வது செய்யுளில் 'எனக்கொன்றுதவ மடுப்பதெண்ணினால்' என்பது 'எனக்கன் றேதவ மடுப்ப தெண்ணிலே' எனக்காணப்படுகின்றது. 'ஒன்று' என்பது பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையின் 'அன்றே' என்பதே பொருத்தமுடைத்து. சிந்திப்பின், நமக்கல்லவா? தவமியைவது எனப்பொருள் கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்தாதல் காண்க. யான்றான் றவஞ்செய்தற்குரியவன் என்பது கருத்து.

ஷை

இம்மை பொய்புரைத் திவறி யெந்தையா
ரம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை வெம்முலைக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வெனே.

என்னும் ௧௧௦-வது செய்யுளில் 'கொம்மை வெம்முலைக் குவையின்வைகிவாழ்' என்பது 'கொம்மை நன்னிதிக் குவையின் வைகிவாழ்' எனக்காணப்படுகின்றது. ஈண்டு மகளிரின்பத்தை வைத்துக்கூறல் சிறப்பின்மையின் நன்னிதி என்பதே சிறப்புடைத்து. நன்னிதி—இன்பத்தைத்தரும் நிதி. அரசிற்குச்செல்வமே இயைபுடைத்தென்க. எந்தை துன்பத்தைத்தரும் நரகத்தையாள, நான் இன்பத்தைத்தருஞ் செல்வத்தின்கண்ணே நிலையுற்று வாழுகின்ற அரசை ஆள்வேனே என்பதுகருத்து. குவை என்பதும் முலைக்கியைபின்மை காண்க.

ஷை

அன்றவ னுலகினை யளிக்க வாகிய
துன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்க
ளின்றள வினுமுறை யிகந்து ளாரிலை
யொன்றுள துரையின முணரக் கேட்டியால்.

என்னும் ௧௨௨-வது செய்யுளில், 'அன்றவனுலகினை யளிக்கவாகியது' என்பது 'அன்றவனுலகினை யளிக்கவாக்கிய' எனக்காணப்படுகின்றது. 'ஆகியது' என்பது தன்வினையாதலின் 'ஆக்கிய' தென்பதே பொருத்த முடைத்து. உலகினைக்காக்கும்படி சிருட்டித்த என்பது பொருள்.

ஷை

தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
வேயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ.

என்னும் ௧௨௭-ம் செய்யுளில் 'தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா-நாயெனத் திரிவது நல்ல தல்லதோ' என்பது 'தீயவப் புலையனி லிகழ்ந்து தேர்கிலா-நாயெனத்திரிவது நல்ல தாகுமோ' எனக்காணப்படுகின்றது. நல்லதல்லதோ' என்பது'நல்ல,தல்லவா' எனப்பொருள்பட்டுப் பொருத்த மின்றாதலின் 'நல்லதாகுமோ' என்பதே பொருத்தமுடைத்து. புலையனைப்போல நானும் அப்பணியை இகழ்ந்து எனப்பொருள் கொள்ளுமிடத்து இகழ்ந்து என்பதும் சிறப்புடைத்தாதல் காண்க.

## ஆரணியகாண்டம்.

### விராதன்வதைப்படலம்.

முத்தி ருத்தியவ் விருந்தனைய மொய்ந்நகையொடுஞ்
சித்தி ரக்குனி சிலைக்குமரர் சென்றணுகினர்
அத்தி ரிப்பெய ரருந்தவ னிருந்தவமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழி றுவன் றுபழுவம்.

என்னும் உ-ம் செய்யுளில் 'முத்திருத்தி யவ்விருந்தனைய மொய்ந்நகை யொடும்' என்பது 'முத்திருத்திய தெனத்திகழு மொய்ந்நகையொடும்' எனக் காணப்படுகின்றது. ''முத்திருத்தியவ் விருந்தனைய'' என்பது பொருட் பொருத்தமின்மையதலின் 'முத்திருத்திய தெனத்திகழும்' என்பதே பொருத் தமுடைத்து.

### சரபங்கர்பிறப்புநீங்குபடலம்.

குரவங் குவிகோங் கலர்கொம் பினொடும்
இரவங் கணுறும் பொழுதே கினராற்
சரவங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர்வா சவனம்.

என்னும் க-ம் செய்யுளில் 'சரவங்கனிருந்து தவங்கருதும், மரவங்கிளர் கோங்கொளிர்வா சவனம்' என்பது 'சரவங்கனிருந்து தவஞ்செய்வனத்,தர வங்கிளர் வெஞ்சிலை யாண்டகையோர்' எனக்காணப்படுகின்றது. 'கொ ம்பினொடும்' எனக்கூறுதலின் ஆண்டகையோர் என எழுவாய் வெளிப் பட்டுவருதலே சிறப்புடைத்தென்க.

அனையின் றுறையைம் பதொடைம் பதுநால்
வினையின் றொகைவேள் விநிரம் பியமா
முனைவன் முதுதே வரின்மூ வரலார்
புனையும் முடிதுன் றுபொலன் கழலான்.

என்னும் ரு-ம் செய்யுளில் 'அனையின் றுறை' என்பது 'அனலின் றுறை எனக்காணப்படுகின்றது. வேள்விக்கியை புடையது அனலாதலின் 'அன லின்' எனக்கோடலே பொருத்தமுடைத்து. சுட்டின்கட் பொருட்சிறப் பின்மைகாண்க.

சி. கணேசையர்.

# நூலாராய்ச்சி.

(சகள-ஆம் பக்கத்தொடர்ச்சி).

தொல்லுரை யாவுமே மெய்யுரை, தொன்முறை யாவுமே நன்முறை என்பன எத்துணை உண்மை பொதிந்த உரைகள் யென்பது யாம் முதற்கண் ஆராய்தற்குரியது. பழமுறை எல்லாம் இழிமுறை என்றேனுப்., பழவுரை எல்லாம் வழுவுரை என்றேனுப், அவ்வுரையினும் முறையினும் பெரும்பகுதி பழுதென்றேனும் யாம் கூறிலம். எவ்வுரையாயினும் எம்முறையாயினும் தொன்மைச் சிறப்பான் மாத்திரம் மெய்ம்மையும் நன்மையும் எய்தா என்பதும், பகுத்தறிவுள்ள மக்கட் பிறப்பினர் யாவரும் நான்முறைகளைத் தம் அறிவுக்கு ஏன்றவாறு ஆராய்ந்து உண்மை தெளிந்து கொள்ளவும் தள்ளவும் உரிமை உடையர் என்பதுமே எம் கூற்றுக்கள். எமக்கு இயற்கைப் பிரமாணமாகத் தோற்றும் இத்துணிபை அங்ஙனம் காணவொண்ணு ஏனையர்பொருட்டு எம்சிற்றறிவினுக்கு எட்டியவாறு விளக்குவேம். உலகத்திலே அரிய பெரிய நூல்களைப்பற்றி வழங்கும் அபிப்பிராயங்கள் எவ்வாறு விளைகின்றன, நடைபெறுகின்றன என்பதை மேனுட்டு மேதாவி ஒருவர் பின்வருமாறு விவரித்துளர்: 'இவ்வபிப்பிராயங்கள் சாமானிய யாக்களால் தெரிந்து தீர்மானிக்கப்படா; மிகச்சிலராம் பேரறிஞரால் தீர்மானிக்கப்பட்டுச் சாமானியரால் கையாளப்படும். மிகச்சிலரென மேற்சுட்டிய பேரறிஞர் குறிப்பிட்ட நூலின் நுண்மைக்கும் அருமைக்கும் ஏற்ப எண்ணிற் குறைந்தவரா யிருப்பர். இச்சிலரது கோட்பாடு அறிவில் அவர்க்கு அடுத்த கீழ்ப்படியில் உள்ளார்க்கு வெளியிடப்படும். முதற்கண் குறித்த சிலரினும் எண்ணின் மிக்க இக்கீழ்ப்படி அறிஞர், தம்மினும் அறிவிற்குன்றினேரும் எண்ணில் துன்றினேருமான அடுத்த கீழ்ப்படியாளர்க்குத் தாம் கேட்டறிந்த அபிப்பிராயத்தை ஓதுவர். இவ்வண்ணம் படிப்படியாய்க் காலக்கிரமத்தில் சில தெள்ளறிஞர் மனக்கோள் (நீர்மடுநடுவண் எறியுண்டதோர் கல்லிற் பிறந்த அலைபோல) உலகெங்கும் பரவிச், சிறந்ததொரு மதக்கோட்பாடு போல நம்பப்படும். அவ்வபிப்பிராயமும் அதற்கேதுவான நூலின் அருமைபெருமைகளும் எவ்வளவு தம்மறிவுக்கு மேற்பட்டனவாயும்

தம் யூகத்தை மீறினவாயும் இருப்பவோ, அவ்வளவு சாமானிய ஜனங்கள் அதை உறுதியோடும் பக்தியோடும் கைப்பற்றுவர். ஒவ்வொரு படியினர்க்கும் தம்மின் அறிவிற் சிறந்தார் மாட்டுள்ள முழு நம்பிக்கையும் அதனல் விளையும் மரியாதையுமே இதன் காரணம். இக்கூற்றின் உண்மையை அறிய விழைவார், உதாரணமாக, வடமொழியில் மறைகளைப் பற்றியேனும் தென்னுரையில் திருக்குறளைப் பற்றியேனும் நடைபெறும் உலகபிரசித்தியையும், அப்புகழ் எவ்வளவு பெரிதோ அவ்வளவு சிறிதே அந்நூல்கள் பயிலப்படுகின்றன என்பதையும் நினைந்து ஒப்பு நோக்குக. ஆயினென் ; அவ்வுலகுணர்க்கு மூலமாய் நின்றது நூலை நன்கு மதித்தற்குரிய நுண்ணறிவினரது துணிபேயன்றேவெனின், கூறுதும். நூலாயும் நுண்ணறிவினர், நூலின் குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுண் மிக்கவே கொள்வர். ஆதலின் அன்னர் புகழ்ந்து போற்றும் நூல்களில் குற்றமே இன்றெனக் கொள்வது பொருந்தாது ; பல் வேறு புரைகளும் பொய்யுரைகளும் மலிந்து கிடக்கலாம்; அவற்றினும் குணங்கள் மிகைபடக் காணின் அவர் போற்றவே செய்வர். சீத்தலைச் சாத்தனர் காலத்து அரங்கேறிய நூல்களில், திருக்குறளன்றி, ஏனைய நூல்கள் இக்காலத்தே எல்லையிலிசையொடும் இலங்கிலவோ ? நூல்களை ஆய்தற்கான நுண்ணறிவில்லாச் சாமானியமாக்கள், அவற்றின் குணங்களையேனும் குற்றங்களையேனும் பெரியோர் கொண்ட அபிப்பிராயங்களின் ஆதாரங்களையேனும் அறியகில்லார் ; ஆயின் அவ்வபிப்பிராயங்களை ஒன்று பத்து நூருக விஸ்தரித்துப் பரவச்செய்யும் பேராற்றல் உடையராவர். 'சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக நான் சொல்வதெல்லாம் முற்றிலும் மெய்யே' என்று சத்தியவிரதம் பூண்டு நியாய சபையிலே படியேறிக் கரிகூறுவாரில், உளமறிந்த பொய்யர் கிடக்க, உள்ளதை உள்ளவாறு உரைக்க விரும்பும் சான்றோர் வாக்கையே ஆராயினும், அன்னர் சாமானிய மாந்தராய் மட்டும் இருப்பின், அவர்கூற்று உண்மையின் மாறுபட்டு மிகையுறலைக் காணலாம். அப்போழ்து அவர் மனமறியப் பொய்கூறிலர் : தாம் உணர்ந்தனவற்றை அலங்கரித்து விரித்துரைத்தலும், தாம் அறியாமே தம்மைத் தூண்டும் மனோபாவ வயத்தினராய் அறியாதனவற்றையும் சிலவமயங்களில் அறிந்தனவாக அநுபவத்துக்கிணங்கக் கூறுதலும், அத்

தகையோர் இயற்கைக் குணமாம். அணுவேனும் உண்மையில் திறம் பாவாய்மொழி நாகாக்குர்ோனின்னர்க்கும் இயல்பின் அமைவது எளிதன்றாக, இன்னோர்க்கு எங்ஙனம் அமையும்? ஆதலின், காலையில் அடிப்புண்ட நீர்நாகத்தை மாலைக்குள் திட்டிவிடமுள்ள ஐந்துதலை நாகம் ஆக்கிவிடுதல் உலகவழக்கு. கொங்கணியன் புலிகண்டகதை யாரும் அறிந்ததே. இத்தகைய உலகபிரசித்தி, தம் கண்கள் உண்மையைக்காணுவாறு மறைத்துவிடாது. நூலாராய்வார் ஒவ்வொருவரும் விலக்கிக் காத்தற்குரிய தோர்பொய்த்திரையென்பது, நன்கு விளங்கும். இத்தகைத்தே உலகவிகழ்ச்சியும்: உலகத்தால் அவமதிக்கப்பெற்ற நூல்களிற் குணங்களும் மெய்யுரைகளும் நிகழப் பெறுவெனக் கொள்ளலாகாது; குற்றங்கள் மிகுந்திருக்கும் என்றே சாதாரணமாய் மதிக்கலாம்.

ஜனசமூகத்தின் நடுவே பிறந்து வளரும் நாம் ஒவ்வொருவரும் இளம் பிராயம் தொட்டு அவ்வக் கூட்டத்தாருள் வழங்கும் பல் வேறு அபிப்பிராயங்களைக் கைப்பற்றுகிறோம். நாமறியுமுன்னரே அவை நம் மனப்புலத்திற் பதிந்து வேரோடித் தழைக்கின்றன. ஆரணங்களையும், ஆகமங்களையும், புராண இதிகாசங்களையும், இன்னும் பல நூல்களையும்பற்றி, அரிச்சுவடி தொடங்குமுன்னமே நாம் அநேக அபிப்பிராயங்களைக் கொள்கின்றோம். தெருவில் விளையாடும் சிறுமகார்க்குள் ஒருவன் வருங்காலத்தொன்றைக் கூறின், 'ஆம், உன் பேச்சென்ன வேதவாக்கோ?' அல்லது, 'நீ என்ன பிரகஸ்பதியோ?' என்னும் உரைகள் நிகழ்கின்றன. நம் வாழ்நாளில் நிகழும் சம்பவங்களைப்போல உண்மையில் நிகழ்ந்த சம்பவங்களே புராண இதிகாசங்களில் நிகழ்ந்தவாறு கூறப்பட்டுள்ளனவாய் நாம் நம்புகிறோம். 'இருட்டிலே பூச்சாண்டி இருக்கிறான்' என்னும் அன்னை உரையை நம்புவது போலவே இயற்கை விரோதமான பல் வேறு பூதங்களையும் இராக்கதர்களையும் செயல்களையும் மெய்யென நம்புகின்றோம். இதுவுமன்றி, நம்முன்னோர்கள் தேவாம்சங்களென்றும், அவர்கள் இயற்றினவெல்லாம் சத்தியவாக்கென்றும், ஆசாரமெல்லாம் சதாசாரமென்றும், இவற்றை ஐயுறல் நிரீச்சுரவாதமாம் என்றும் போதிக்கப்பட்டு முழுதும் நம்புகிறோம். தாய்முலைப்பாலோடே இக்கொள்கைகளும் நமக்கு ஊட்டப்படுகின்றன. இவ்வாறு பதிந்தன எளிதில்

மாறுபவோ? தெள்ளறிவாம் கடப்பாரையும் அவற்றைக் கல்லுவ தில் முனைமழுங்குமன்றோ? பின்னருற்ற திண்ணறிவின் பயனுக அவற்றைக் களைந்து ஒருசார் நீக்கினும், தொட்டிற்றோழமை இழக் கும் துன்பம் அப்பொழுது விளையுமன்றே. இது நிற்க.

தொன்மைபற்றி உண்மை நாட்டும் உரையாளர் இக்காலத்தோ ராகிய நாமும் சில்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அக்காலத்தோர் க்குச் சேணிடைத் தொல்லோராய் விளங்குவோம் என்பதை நினை யார் போலும். தொன்னூலொடும் முறையொடும் ஒப்புநோக்கி இப் பொழுது கடியப்படுவனவெல்லாம் அக்காலத்தே தொன்னூலாயும் தொன்முறையாயும் கொண்டாடப் பெறுபவோ? இக்காலத்து வழு வுரைகள் அக்காலத்தே பழைய மெய்யுரைகளாகப் போற்றப்படு பவோ? நமது பின்னோரே அக்காலத்திருப்பாராதலின், அவர்க்கும் இத்தகைய மயக்கம் உண்டாகா வண்ணமும், இப்போழ்தினும் அப் போழ்தினுள் பன்னூறு மடங்கு அறிவு வளர்ந்து தழைத்தோங்கு மாறும் திருவருளை வேண்டுவோம். தம்மினும் * தம்மக்கள் அறி வுடைமையன்றோ மாநிலத்தில் மன்னுயிர்க்கெல்லாம் இனிது? 'அறி விற் பெருகியுள்ள நாம் நம்முன்னோரை அறிவினர் என்கின்றோம்; நம்மினும் பேரறிவினராம் நம் புதல்வர் நம்மையும் அவ்வாறே (அறி வினர் என்று) கூறுவார் என்பது திண்ணம்.' என்னும் மேனாட்டுரை நம் கொள்கையொடு முரணியதேயாம். மானிடரானோர் எல்லோரும் தம்முள் ஏற்றத்தாழ்ச்சி வாய்ந்த சிற்றறிவினரே யன்றி ஒருவரே னும் முற்றறிவினரிலர் என்பதை மறுப்பாரில்லை. 'ஆனைக்கும் அடி தவறும்' 'கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி கதலித்தண்டு க்கு நாணும்', 'கொல்லுலைக் கூடத்தால் தகராதகல் சிற்றுளியால் தகரும்' இவைபோன்ற முதுரைகள், மானிடருள் அறிவான் மேலா னோர் பிழைக்கக் கூடுமென்பதையும், சிலவேளை அப்பிழைகளைக் கீழானோர் உணர்ந்து திருத்தலாகும் என்பதையும் விளக்குப. இத ஞல் ஆன்றோர் நூல்களை ஆராய்ந்து குற்றங்கடிந்து குணங்கோடல் அவர்க்கு இழுக்காகாது, இயல்பு முறையேயாம் என்பது தெளியப்

* இத்திருக்குறளுக்குப் பரிமேலழகரால் வேறு கருத்தொடு உரை கூற ப்பட்டுளது.

பட்டது. அன்றியும், தொன்னூல்களிற்பல ஒன்றோடொன்று முரணுவதும், ஒன்றையொன்று கடிந்துரையாடுவதும், அக்காலத்தே அவை பிழையிலா நூல்களாகப் பாராட்டப்பெற்றில என்பதை வற்புறுத்தும். ஆயின் அவற்றை ஆராய்ந்து தெளிதலே எப்பொழுதும் நல்லறிவாம்.

உண்மை இவ்வாறிருக்கத், தொன்னூல்கள் மாட்டு இத்துணை மூடபக்தி எங்ஙனம் விளைந்ததோ சற்றுக் கவனிப்போம். ஆப்பிரிக்கா கண்டத்திலே ஓரூரில் தம் தொழிலை நடாத்திவந்த கிறிஸ்துமதப் போதகரொருவர் நாகரிகமற்ற வனவாசியாகிய அவ்வூரான் ஒருவனோடு ஒருநாள் வெளியே சென்றார். தமக்கு வேண்டியதொன்றை வீட்டில் மறந்து வைத்துவிட்டதை வழிநடுவில் உணர்ந்து, எழுதுகருவிகள் ஒன்றும் கைவசமின்மையால், மரப்பட்டை ஒருதுண்டையெடுத்துச் சுண்ணம்புக் கட்டியினால் தமக்குவேண்டிய பொருளின் பெயரை அதன்மேலெழுதி, அப்பட்டையை அவ்வனவாசிகையிற் கொடுத்து, அதைத் தம் மனையாட்டியிடம் கொடுத்து அவள் தருவதை வாங்கிவரச்சொன்னார். எண்ணெழுத்தென்னும் கண்களைப்பற்றிக் கனவும் கண்டறியா அப்புல்லறிவாளன், அவர் தன்னைப் பரிகசிப்பதாக நினைத்து வாதாடினான்: வாய்மொழியின்றி, அவர்க்கு வேண்டியதிதுவென்று அவர் மனையாட்டி அறிவதெப்படி? மரப்பட்டை வாய்பேசுமோ? இத்தூதை மேற்கொண்டு செல்லின் தன்னினத்தார் தன்னைப் பித்தனாய் மதிப்பரன்றே? கடைசியில் அவரையே பித்தராய் எண்ணிக்கொண்டு அவரது ஆணையை அஞ்சினவனாய் அவன் அவர் வீட்டுக்குச் சென்று, அம்மரப்பட்டையை அவர் மனையாட்டி கையிற்கொடுத்தான். இதென்ன புதுமை! அப்பட்டையைப் பார்த்துக் கீழே எறிந்துவிட்டு அவள் வீட்டுட் போய்த் தன் கணவர் விரும்பிய பொருளைக் கொணர்ந்து அவன் கைக்கொடுத்துத் தன் கணவரிடம் கொடுக்கச் சொன்னாள். அப்பட்டையை எடுத்துச்சேமித்து வைத்துக்கொண்டு காணாதுகண்ட அவ்வனவாசி வேகமாயோடிப்போய் அப்பொருளைப் போதகரிடம் கொடுத்துவிட்டுத், தன்னினத்தார் வசிக்கும் சேரிக்குச் சென்று அப்பட்டையை அவர்க்குக்காட்டித் தான்கண்ட அதிசயங்களையெல்லாம் பன்னிப் பன்னி வியந்தான்.

என்னே இவ்வெள்ளைமேனியர் மதி, மரமட்டைகளையும் பேசச்செய் கின்றனர் !

வனவாசிகளுக்கேயன்றி நாகரிகமுற்றார்க்கும் தம்மறிவைக் கடந்த விஷயங்களில் அளவின்றி வியப்புறுதல் இயல்பே. ஆயின் அவ்வியப்பு எப்பொழுதுமே புகழ்ச்சியாய் முடியாது; வெகுவாய் இகழ்ச்சியாயும் முடியும். மேற்கூறிய கதையில் அவ்வனவாசிகள் அப்போதகர் செயலைப் பைசாச மந்திரோபாயமாக மதித்து, அப்பட்டையை ஊர்ப்புறத்தே எரித்துத் தம்மூர்க்கும் தமக்கும் தீங்குறா வண்ணம் தம்முறைப்படி கழுவாய் இயற்றியிருந்தாலும் இயல்போ டொத்திருக்கும்.

(இன்னுவரும்.)

அ. மாதவையர்.

---

# செய்யுள்.

(சஉஉம் பக்கத் தொடர்ச்சி.)

மன்பதைகளில் எல்லாருமே எவ்வகைத்தொழிலையும் செய்யக் கூடும் என்பதில்லை. "எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது". ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலுக்கேற்ற இயற்கையமைப்பு இருக்கும். அதையறிந்து அவரவர் அவ்வத்தொழிலிற் பிரவேசித்தால் பலதொழில்களும் செவ்விபெற்று நடக்கும். கையும் விரல்களும் மிருதுவாய்ச் சிறியனவாய் இருப்பவர்கள் மருத்துவச்சிவேலைக்கேற்றவராவர். சுருதிலய உணர்ச்சியோடு நல்ல சாரீரமும் பெற்றவர்கள் ஸங்கீதஸாஹித்தியராவர். கல்வியறிவோடு உயரமும் காத்திரமுமான உடல்பெற்றவர்கள் உவாத்திமைத்தொழிலுக்கு உரியவராவர். திருடன் இராஜவிழி விழிப்பானா? கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவனுக்குக் கோயிலில்வந்து ஆடத்தெரியுமா? நெல்லுக்குற்றுகிறவளுக்குக் கல்லுப்பரீக்ஷை தெரியுமா? கருவிலே திருவில்லாதவர்களைக் கவிபாடச்சொல்வது கூலிக்குக்குற்றுகிறவளைக் கேளிக்கைஆடச்சொல்வதுபோலாம். கமனசக்தி உள்ளவர்களிடத்தில் கவிகள் தாமாகவே சுரக்கும். "தெய்வப்புலவனுக்கு நாஉணரும் சித்திரவோடாவிக்குக் கை உணரும்."

நிகண்டு வாகடம் சோதிடம் முதலியன ஞாபகநிமித்தமாக எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கப்பட்டு வந்தனவேனும் அவைகளில் கவித்துவமென்பது ஒன்றுமில்லை. யாப்பருங்கலம் காரிகை முதலிய இலக்கணங்களில் சொல்லியிருக்கும் விதிகளையெல்லாம் இலக்கியப்பயிற்சியுள்ள ஒருவன் இரண்டொருநாளில் அறிந்துகொள்ளக்கூடியனவே. அவ்விதிகளையறிந்த எவனும் சாஸ்திரவிஷயங்களை ஞாபகநிமித்தமாக எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கலாம். எப்படியும் சதுரகராதியில் எதுகையகராதியும் ஒன்று ஏற்பட்டிருப்பதனால் எதுகை விஷயத்தில் யாதொருகஷ்டமும் இல்லை. இன்னபொருளை இத்திறப்பாட்டில் இன்னவிதமாக அமைக்க என்றவளவிலே அங்ஙனமே அமைத்துக்கொடுக்கின்ற ஆசுகவிகள் அந்த வித்தையை அப்பியாசம் பண்ணினவரே யாவர். கூடசதுக்கம் கோமூத்திரி நாகபந்தம் முரசபந்தம் முதலான சித்திரகவிகளைப்பாடுவதும் அப்பியாச வித்தையேயாகும். மதுரகவிகளும் விஸ்தாரகவிகளுமே கவிவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். பலவிதமான தொடர்நிலைச் செய்யுளும் தனிநிலைச் செய்யுளும் பாடவல்லவர்கள் அகலகவிகள் அல்லது வித்தாரகவிகள் எனப்பெறுவர். ஓசையும் பொருளும் இனிதாய் முழுதுஞ் செஞ்சொல்லாய் அலங்காரமுந் தொடையும் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவது மதுரகவி.

எடுத்த பொருளினே டோசை யினிதாய்
அடுத்தவைசெஞ் சொல்லா யணியும் - தொடுத்த
தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு.

என்றார் பாட்டியலார். இங்ஙனம் பாடவல்லவர் மதுரகவிகள் எனப்படுவர்.

காரிகைமாத்திரங்கற்றுக் கவிபாடுவோர் கவிகள் ஆகார். கவிகள் கருவிலே திருவுடையவர். பழைய காவியங்களை வாசிப்பதும் யாப்பிலக்கணமறிவதும் அவர்கட்கு ஒருவாறு துணைக்கருவிகளேயாகும். கல்விப்பயிற்சி கவித்துவத்தைப் பின்னும் மேம்படுத்துமேயன்றிக் கவித்துவத்தை உண்டாக்கமாட்டாது. கல்வியிற்பெரிய கம்பர்போன்ற கனகவிகளும்உளர். ஷேக்ஸ்பியர்போலே கல்விப்பயிற்சி வெகுவாயில்லாத மஹாகவிகளும் உளர். உலகியலை நன்கு

ணர்ந்து ரஸஞானம் விசேஷித்த மதியூகிகளாகையால் அவர்களு டைய கவித்துவம் தன்னாற்றலே ஆற்றலாக ஒளிர்வதாகும். கற்ற வித்தையைக் காய்ச்சிக்குடிக்கலாம். கவித்துவம் அது செய்யலாவ தன்று. உள்ளடங்கா மகிழ்ச்சியாலும் உள்ளக்கொதிப்பினாலும் உதிப்பதே உத்தமகவிதை. உலகிற் பொருள்களைக் கண்ணடியன் றிக் கல்லும் சுவரும் பிரதிபிம்பிப்பதில்லை. உலகவியற்கையைக் கவி தையாகிய கண்ணடியால் பிரதிபிம்பிக்கச்செய்பவர்களே உத்தமகவி கள். உலகவியற்கைஎன்பதுபிரகுர்தி. மனுஷப்பிரகுர்தியையும்தேவ சிருஷ்டியில் கேவலருக்கு விளங்காதபிரகுர்தி விசேஷங்களையும் உத் தமமான உலக நீதிகளையும் சுவைபட உரைப்பதே கவி லக்ஷணமாம். இங்ஙனம் உரைப்பதே தமிழில் 'பாடல்சான்ற புலனெறி வழக்கம்' எனப்படும். "இல்லது கூறுதல் தொல்லாசிரியர் தமிழ்வழக்கன்று" புனைந்துரை வகையால் புலவர் இல்லனவுங் கூறுபஎனின் உலகத் தோர்க்கு நன்மைபயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக்கருதி, நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவுங் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறுர். இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடுபிறந்து இன்பஞ் செய்யாதாகலின், உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது. "(நச்சினார்க்கினியர்) "செய்புள்என்பது விழுமியபொருள் கொண்டு விளங்கிய சொற்றொடையாம். விழுமியபொருளாவது:- 'உனக்கு மகன் பிறந்தான்' 'உன் பகைவன் பட்டான்' என்னும் இத் திறத்த வாக்கியங்களால் விளையும் இன்பத்தினும் வேறாயதோர் பேரின்பம் விளைப்பது. இதனை விளக்குவன குணமும் அலங்காரமு மாம். ஆகவே செய்யுளுக்கு அப்பொருள் உயிரும் சொற்றொடை உடம்பும் குணவலங்காரங்கள் அழகுசெய்வனவுமாம் என்பது பெற ப்படும். இதனை உள்ளிட்டே பவணந்திமுனிவர் 'பல்வகைத்தாதுவி னுயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிடனாக வுணர்வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்' என்று கூறினார்" (தண்டி யலங்காரஸாரம்).

குணவலங்காரங்கள் என்பதில் குணம் என்பது குணவணி; அலங்காரம் என்பது சொல்லணியும் பொருளணியுமாம். ஒருவனு க்குள்ளதிண்மை இளமை முதலிய தேககுணங்களும் தயைதைரி

யம் முதலிய ஆத்துமகுணங்களும் அவனைவிளக்குவதுபோலக் குணவணிகள் செய்யுளை விளக்குகின்றன. இளமை நீங்கிய உடம்பில் ஆபரணங்கள் விளங்காமைபோலக் குணவணிகள் இல்லாக்கவிகளில் உவமை முதலிய அலங்காரங்கள் விளங்கா. குணவணியாவது வாக்கியமாகிய மூடியின் நடையை நோக்கியது. இது நெறியெனவும் பாகமெனவும் படும். அஃதாவது கவியமைப்புவகை என்பதாம்.

கவியமைப்பில் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல்வேண்டும். பொருள் அழுத்தமும் சொல்வன்மையும் அமைந்து நடை மிடுக்காக இருப்பதைப் புலவர்கள் போற்றுவதில்லை. சொல்வன்மையின்றிப் பொருள் எளிதில் விளங்குவதான செய்யுள் நடையே சிறந்ததென்பது புலவர் துணிபு. வல்லினமுந் தொகைநிலைத்தொடர்களும் மிகுதலின்றி, வலிமெலியிடைகளும் நெடில் குறில்களும் கலந்து செவிக்கின்பந் தரத்தக்க சொற்கள் வரத்தொடுத்தலால் வாக்கியங்கள் தேனூறுபாய்ச்சலாய் இனிமைபயக்கும். ஒவ்வொரு வாக்கியத்திலும் கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுதற்கு வேண்டிய சொற்கள் அமைந்திருக்கவேண்டும். ஒரு பொருளைப் புகழுமிடத்து அசம்பாவிதமாய் உலகவொழுக்கத்துக்கு விரோதமாகக்கூறாமல் உலகவியற்கைக்கியையப் புகழ்வதே சிறப்பாகும். குறிப்பினாலே ஒரு சிறப்பு விளக்கும் பொருள்படப்பாடுவது உசிதம்.

தொடைகளைப்பற்றிநின்று அழகுசெய்வன குணவணிகள்: சொல்லையும் பொருளையும் பற்றிநின்று அழகுசெய்வன சொல்லணியாகிய அலங்காரங்கள். இளமை முதலியனபோல் ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன அவை. கடககுண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன இவை. ஆதலால் சொல்லணி பொருளணியான அலங்காரங்களை இடமறிந்து ஏற்றபெற்றி அமைப்பதன்றி, அமிதமாக அமைப்பது அருவருப்பே தருவதாகும். தக்கபடியே குணவலங்காரங்கள் அமைந்துள்ள செய்யுளால் ஜனிக்கின்ற இன்பமானது அப்படிப்பட்ட செய்யுளைப் படிக்கும்படி உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றது. அவ்வின்பம் மனத்தைவிட்டகல்வதில்லை.

கவி செய்வதெல்லாம் காவியமேயாயினும், தமிழில் உலா மடல் கலம்பகம் பரணி ஆற்றுப்படை முதலான தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும் சிறுகாவியங்கள் எனப்படும். தன்னிகரில்லாத் தலைவன் வரலாறு உரைப்பதாய்ப் பலவருணனைகள் உள்ளதாய் ஒரு திறப்பாட்டாலேனும் பலதிறப்பாட்டாலேனும் அமைக்கப்பட்டு மெய்ப்பாடும் சுவையுந் தோன்றநிற்பது தொடர் நிலைச்செய்யுள் அல்லது பெருங்காப்பியம் எனப்படும். சிலப்பதிகாரம்—மணிமேகலை—சிந்தாமணி—கம்பராமாயணம் என்றாற்போல்வன பெருங்காப்பியத்துக்கு உதாரணமாம். "உலகவியல்பறிதலும் ரஞ்சனையும் காப்பியத்திற்குப் பயன்" என்பவாதலின் பலவருணனைகள் வேண்டுவனவாயின. 'தன்னிகரில்லாத்தலைவன்' என்ற கருத்து ஒப்புயர்வில்லாத நற்குண நற்செய்கைகளுடைய தலைவன்மேல் பிரபந்தம் இசைத்தல் இம்மை மறுமைக்கு உறுதிபயக்கும் என்பதாம். இப்படிப்பட்ட தலைவன் மேம்பாட்டைச் சிறப்பிப்பதாயின் இழிந்தோன் சிறப்புங் கூறற்குரியது."

சிறுகாப்பியமாயினும் பெருங்காப்பியமாயினும் மெய்ப்பாடும் சுவையுந் தோன்ற நிற்பதே செய்யுட்குச் சிறப்பிலக்கணம். மெய்ப்பாடாவது பொருட்பாடு. அஃதாவது உய்த்துணர்ச்சியின்றி அவ்விடத்து வந்தபொருளானே சொல்லப்படும்பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலாகிய சத்துவம்படுமாற்றான் வெளிப்படச்செய்வது. வடநூலில் பாவம் என்பதிதுவே. இதற்கு மனநிலை என்பது பொருள். சத்துவங்களெல்லாம் பிறரிடத்துள்ள சுகதுக்கங்களைத் தமதாகப்பாவித்தலால் வருவனவாகும். சுவையாவது வடநூலில் ரஸம் எனப்படுவது. சந்தோஷத்தை உண்டாக்குவது என்பதாம். சுவைகளுக்கு மெய்ப்பாடுகளே அடியாம். "இவை நாடகத்திலும் காவியத்திலும் செய்திறத்தினாலும் சொற்றிறத்தினாலும் தூண்டப்பட்ட வாசனையின் திண்மையால் தம்மவையே போல அநுபவநிலையில் வந்து ஆனந்தமயமாகவே நிற்பன." ஆகவே பாவனுசக்தியால் சுவை விளைப்பதே கவிலக்ஷணமாகும். பாவனுசக்திக்குக் கற்பனுசக்தி என்றும் ஒரு பரியாயநாமம் உண்டு.

*

கற்பித்தல் என்பது நியமித்தல் பிறப்பித்தல் என்பதாம். கற்பனை என்பது இல்லதை உள்ளதாக உண்டுபண்ணல். கவிகற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல். பொய்யும் புனைந்துரையும் கவிகற்பனையல்ல. கட்டுக்கூட்டாய் மனம்போன போக்கிலே உரைப்பதும் கவிகற்பனையன்று. உத்பிரேக்ஷை மாத்திரமுமே கற்பனையன்று. வர்ணியங்களை உள்ளது உள்ளபடியே உரைப்பது வசனத்திலும் வசனரூபமான சரித்திரத்திலும். கவிகற்பனைகலந்தபோது மாத்திரமே கத்தியமும் கத்தியரூபமான சரித்திரமும் பத்தியமாவது வர்ணியத்தை விளக்கும் பொருட்டும் பிரகுர்தியிலும் பிரகுர்திசம்பவங்களிலும் மற்றவர்களுக்குக் கட்புலனாகாத ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டுவதும், வர்ணியங்களின் அந்தர்ப்பாவ சூட்சுமங்களைப் பலரும் அறிந்து வியக்குமாறு சித்திரித்துக் காட்டுவதும், சந்தர்ப்பங்களுக் கேற்றபடி கவியானவன் தற்குறிப்பேற்றியுரைப்பதும், 'அப்பத்தை எப்படி சுட்டாளோ அதற்குள்ளே தித்திப்பை எப்படி நுழைத்தாளோ' என்று அதிசயிப்பவனைப்போலச் சொற்களை இந்தக்கவி எப்படி அமைத்தானோ அதில் ஆனந்த ரஸத்தை எப்படி ஏற்றினானோ என்று படிப்பவர் அதிசயிக்கும்படி செய்வதும் முதலான சாதுரியங்கள் கற்பனாசக்தியின் கூறுபாடுகளாம். பகுத்தறிவுக்கும் கற்பனாசக்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஏனையரிடத்தில் காணப்படாத கவியூகை ஒருவனிடத்தில் சுவபாவமாய் எவ்வளவுக்கெவ்வளவு அமைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவாக அவன் கவித்துவம் சிறப்புறுகின்றது. இந்த யூகையில்லாத்விடத்தில் கவிரஸம் ஜனிப்பதில்லை. கவிரஸத்துக்குக் கற்பனாசக்தியே காரணம். கற்பனாசக்தியில்லாதவன் கவி என்கிற பெயருக்கு உரியனாகான். இந்த சக்தி விஞ்சிய பேர்களே மஹாகவிகள் எனப்படுவர். வடமொழியில் 'கவிகாளிதாஸ:' என்பதுபோலே, கிரீக்கில் ஹோமரும் லாடினில் டான்டேயும் இங்கிலீஷில் ஷேக்ஸ்பியரும் பாரசீகத்தில் பெர்வேஸியும் தமிழில் கம்பரும் இந்தக் கற்பனாசக்தி விசேஷத்தாலே லோகப்பிரசித்தமான கவிகளாயினர்.

(இன்னும் தொடரும்.)

தி. செல்வக்கேசவராயன்.

# பாண்டவர் காலம்.

பாண்டவர் காலத்தைப் பற்றி யான் ஆவணி மாசத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலெழுதிய விஷயர், பத்திராசிரியரை* நடுநிலை சிறிது தடுமாறவும், சுடுமொழி சிலவழங்கவுஞ் செய்தமை செந்தமிழ்ப் பத்திரிகாபிமானிகள் யாவர்க்கும் புலனும். சுடுமொழிக்கஞ்சுகின்றிலேன். அவர்கள் நடுநிலை பிழைத்தமைக்குக் காரணனாயினேனேயென அப்பழிக்குப் பெரிது மஞ்சுகின்றேன்.

பத்திராசிரியரவர்கள் நடுநிலை சிறிது துளங்கினார்களாயினும், "இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சி செய்வார் செய்யுந் தவறுகள் இன்னவை யென்று விளக்கி யெழுதியவற்றில் ஒரு பாகம் உண்மையுடையதேயாம்" என்று கூறியவாற்றால், யான் எழுதிய விஷயத்தில் ஒரு பாகமாயினும் அவர்களுக் கங்கீகாரமாயிற்றே எனமகிழ்கின்றேன். மற்றப்பாகம் அவர்கள் கூறியவாறு "வெற்றடுக்குச்சொற்கள்" ஆயினமை என் புன்புலமைக்கிழுக்கன்று. அது நிற்க.

யானெடுத்துக் காட்டிய பிருகத்சங்கிதைச் சுலோகம், "சககாலத்துக்கு 2526 வருஷங்களுக்கு முன்னே உதிஷ்டிரன் அரசியல் புரியும்போது சப்தரிஷிகள் மகத்திலிருந்தன" எனக் கூறுகின்றது. அச்சுலோகத்தில் வரும் சககாலம் என்பதற்குப் பூர்வவியாக்கியான கர்த்தர்களும், ஸ்ரீமத். N. சிதம்பர ஐயரவர்களும் விக்கிரமசகமெனப் பொருள் கொண்டார்கள். அவர்கள் கொண்டதையே யான் எடுத்துக்காட்டிப் பாண்டவர்காலம் 4500-க்கு முற்பட்டதென நாட்டினேன். அவ்விஷயத்தில், முந்தியுள்ள கர்க்காசாரியார் பிந்தியுள்ள விக்கிரமசகத்தைச் சுட்டல் கூடாதென்பது பத்திராசிரியர் அவர்கள் ஆக்ஷேபம்.

அஃதுண்மையே. பத்திராசிரியர் தமது கூற்றுக்கு வேலங்கைக் கோபாலையரவர்களை ஆதாராசிரியராக்கொண்டனர். கோபா

---

* பிள்ளையவர்களது கொள்கைக்கு எதிராகப் "பாண்டவர்காலம் II" எழுதினவர், "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களேயன்றி யானல்லன். எனக்கும் அவர்க்குமுள்ள பெயரொற்றுமையால் அவரையானாகவெண்ணிப் பிள்ளையவர்கள் "பத்திராசிரியர்" என்றெழுதிச் செல்கின்றார்களாயினும், செந்தமிழபிமானிகள், அவ்விடங்களை "உதவிப்பத்திராசிரியர்" என்றே படிப்பார்களென நம்புகின்றேன்—ரா. இராகவையங்கார், பத்திராசிரியர்.

ஐயரவர்கள் சக மென்பதற்குப் புத்தசகமெனப் பொருள் கண்டார்கள். புத்தசகந்தொடங்கி 2450 வருஷமாயினவன்றே. இத்தொகையோடு 2526 சேர வருவது 4976 வருஷமன்றே. எனவே உதிஷ்டிரன் காலம் 5000 வருஷத்தை அடுப்பது பிரத்தியக்ஷமன்றே.

கோபாலையரவர்கள் சகமென்பதற்குப் புத்தசகமெனப் பொருள் கொண்டதுண்மையே; அச்சுலோகத்தில் வரும் " ஷட்துவிகபஞ்சதுவி " என்பதற்குத் தொல்லாசிரியரெல்லாம் 2526 எனவுரைத்த பொருளைக் கொள்ளாது 26 தரம் 25 எனப் பொருள் பண்ணினார்களன்றேவெனின், அது புரட்டுரையென்றே நம் பத்திராசிரியரும் அதுபற்றிப் பேசாதொழிந்தாரென்க. பாண்டவர் காலத்துக்கு எல்லை 3100 வருஷம் எனச் சங்கற்பித்துக்கொண்ட கோபாலையரவர்கள் இச்சுலோகம் தமக்குச் சத்துருவாயிருப்பது கண்டு அதனைத் தமது கொள்கைக்கியையுமாறு புரட்டி யர்த்தம் பண்ணிக்கொண்டார்களென்பது சிறுவர்க்கும் புலனும். சோதிஷ சித்தாந்தங்களில் பெருந்தொகைகளை ஒவ்வோரிலக்கமாக வலப்புறந்தொடங்கிக் கூறி இடப்புறத்தின் முடிப்பது வழக்காறன்றே. அதுவுமன்றி " ஷட்துவிகபஞ்சதுவியுதாசககாலே " என்பதில் " யுதா " என்னுஞ்சொல்லுக்குக் கூடிய வென்பது பொருளன்றிப் பெருக்கிய என்பது பொருளாகாமையுங் கண்டுகொள்க. ஆகவே வேலங்தையாருரை புரட்டுரையேயாமென்க.

இவ்வகைப் புரட்டுரைகாரரை உத்தமவித்துவசிகாமணியாகிய நம் பத்திராசிரியர் மேற்கொண்டு அவர் கொள்கையைப் போற்றுவது அறிஞர்க்கெல்லாம் பெருந்துக்கமும் வெட்கமுமாம்.

பத்திராசிரியர் தாம் பாண்டவர்க்குக் கூறும் 3100 வருஷ எல்லைக்கு ஆதாரம் வேலங்தைக் கோபாலையர் செய்த பூர்வ இந்திய காலாக்கிரம மென்னும் நூலென்றும், தமது கூற்றைக் கண்டிப்பதினும் வேலங்தையார் நூலைக்கண்டிப்பதே உலோகோபகாரமா மென்றும் கூறி அவரைக காட்டிவிட்டுத் தாம் பின் வாங்குகின்றனர். இஃதொரு கிருஷ்ணவியாஜம்.

வேலங்தையார்நூல் ஸ்ரீமத். T. சதாசிவையரவர்களாற் கண்டிக்கப்பட்டது பத்திராசிரியர் அறியார் போலும்!

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# கொச்சி தேசத்துக் "காடர்கள்."

## 'காடர்' என்பார் யாவர்?

"காடர்களும்" யானைகளும் இல்லாவிடத்துக் கொச்சிசம்ஸ்தானக்காடுகள் பிறருக்கு யாதொருபலனையும் கொடுத்திராவென்று கூறப்பட்டிருக்கின்றது. யானைகளைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். காடர்களையறிந்தோர் சிலரேயாவரென்று மதிக்கிறோம். குன்றுகளும் மரஞ்செடிகொடிகளும் புதர்களும் நிறைந்த காடுகளில் அகப்படக்கூடிய விலையுயர்ந்த அமிசங்களில் காடர்களையும் யானைகளையும் சேர்க்கலாம். ஏனெனில் கொச்சிசம்ஸ்தானத்துக் காடுகளிலிருந்து வெட்டப்படும் பெருத்தகட்டைகளை யிழுப்பதற்கும் தூக்கிக்கொண்டுவருவதற்கும் யானையில்லாவிடில் முடியாது. அதுபோலவே காடர்கள் இல்லாவிடில் சாமானியஜனங்கள் பயமின்றிக் கொச்சிக்காடுகளுக்குள் போதற்கியலாது. காடர்களென்பார் கொச்சி சம்ஸ்தானத்துக் குன்றுகளில் வசிக்கும் ஒருவகை ஜாதியைச் சேர்ந்தவர்; ஏனையோர் இவர்களை வனவாசியென்றுங்கூறுவர்; ஜனத்தொகையில் மிகுந்திருக்கவில்லையாயினும் மலைநாடான கொச்சிசம்ஸ்தானம் முழுவதும் அவர்கள் பரவியிருக்கிறார்கள். ஊன்றிப்பார்க்குமிடத்து அவர்களுட்பெரும்பாலார் நீக்ரோவரை நிகர்த்தவராவரென்றுஞ் சொல்லலாம். அவர்களிடமிருக்கும் விசேஷமென்னவெனில் அவர்களுக்குக் கூர்மையில்லாத சப்பட்டையான மூக்கும் கருநிறங்கொண்ட சுருட்டைமயிரும் அம்மயிர் ஒன்றுசேராது, கறுப்புநிறமுள்ள முகத்திலும்தோளிலுமாய்த் தொங்குதலுமாம். கொச்சிசம்ஸ்தானத்திலுள்ள நெல்லியம்பட்டி, பொம்பிக்குளம் மற்றுமுள்ளகாடுகள் எல்லாவற்றிலுமாக 600 காடர்களுக்கதிகமிருக்கமாட்டார்களென்று கூறப்படுகின்றது. காட்டுக்கிழங்குகளையும் பழங்களையும் தின்றுதான் அவர்கள் ஜீவித்துவருகிறார்களேயன்றி வேறுவிதமான காட்டுமிருகங்களை அடித்துக்கொன்று அவைகளின் இறைச்சியையாவது நாகரிகமிருந்தஜாதியர் தினசரி உண்ணுவதற்காக உபயோகிக்கும் அரிசி, கோதுமை போன்ற நவதானியங்களையாவது சமையற்செய்து புசிக்கிறார்கள் என்று சொல்

வதற்கில்லை. சிற்சில சமயங்களில் மாமிசம் தின்பதில் அவர்கள் கவனஞ்செலுத்துகிறார்களெனினும் எக்காரணத்தாலும் காட்டெருதின் மாமிசத்தைத் தொட.மாட்டார்கள். காட்டெருதோ (Bison) கொச்சிக்காடுகளெங்கும் நிறைந்திருக்கிறது. சாதாரணமாய்த் தென்னிந்தியாவிலுள்ளோர் தாம் தினந்தோறும் அரிசிச்சமையல் செய்து அன்னம்புசிப்பதோடு கோதுமையைச் சமையல்செய்து புசிப்பார்களானால் அதை எப்படி அதிகம், அளவுக்குமிஞ்சினதென்று நாம் கூறுகிறோமோ அப்படியே இக்காடர்கள் தாம் தினந்தோறும் உண்ணும் காய் கிழங்குகள் ஒருபுறமிருக்க வருஷத்தில் ஒருமுறையோ அல்லது இருமுறையோ இவர்கள் அரிசிகொண்டு சமையல்செய்து உண்பார்கள். இவர்கள் தங்கள் தெய்வத்திற்குப் பூஜை போடுவதுமுண்டு; பொங்கற் பண்டிகையென்று கொண்டாடுவார்கள்; இவர்களுக்குத் தெய்வபக்தி பொதுவாயிருந்தபோதிலும் பிரதானமாக இவர்கள் தொழுவது தேவி என்ற அம்மனைக்குறித்ததாகும். தேவிபூஜைசெய்யுங்காலத்தில் முதிர்ந்த வயதுடையோர் முன்வரமாட்டார்கள்; பூப்படையாப்பெண்கள் ஸ்நானம்பண்ணி வெகு ஆசாரத்துடன் அரிசிச்சமையல்செய்து அப்போதே பறித்த கந்தமூலாதிகளைப் பக்குவம்பண்ணி முதன்முதலாய் தேவிக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பின்புதான் சிறியோர் பெரியோர் எல்லோருமாகச் சேர்ந்து உண்பார்கள்; இவ்வளவு ஆசாரத்துடனிருக்கும் இவர்கள் அபின்சாராயம்போன்ற லாகிரிவஸ்துக்களை உபயோகிக்காமலிருப்பதில்லை. அவைகளிலும்பிரியமுண்டென்பதற்கறிகுறியாய் சிறிதுசிறிதாக அபினை உட்கொள்ளுவார்கள்; இதைக்காட்டிலும் சாராயத்தில் அவர்களுக்கு ஆர்வம் அதிகமுண்டு; ஏனெனில் கங்குகரையின்றி ஆண்பெண் இருபாலாரும் தத்தம் குஞ்சுகுழந்தைகளோடு சேர்ந்து குடிப்பார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள சூத்திரஸ்திரீகளையொப்ப இக்காடர்களைச் சேர்ந்த ஸ்திரீகள் புடவையுடுத்திக்கொள்ளுவார்கள்; இவர்களுக்கு ஆபரணாலங்கிருதமும் உண்டு; பொன் வெள்ளியினாலாய காதணிகளும் கழுத்தணிகளும் அவர்களுக்கு அகப்படாமற்போனாலும் இலைகளைக்கொண்டும் ஓலைகளைக்கொண்டும் அந்தஸ்திரீகள் அலங்காரஞ்செய்துகொள்ளுகிறார்கள். பித்தளைக்கம்பிகளினாற் செய்த நத்துத்தான் அவர்கள் மூக்காபரணமாம். சென்ற சிலதினங்களாகவே ஆங்

கிலநாட்டிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் வர்ணம்பூசிய சித்திரப்பட்டாடை (Chintz) அவர்களுள் உபயோகிக்கப்பட்டு வருகிறது; இக்காடர்களில் சிறிது மேன்மையடைந்தவராகக் கருதப்படும் ஸ்திரீகள் அச்சித்திரவாடைகளைப் புடவைகளுக்குப் பிரதி உடுத்திக் கொள்ளுகிறார்கள்.

## இவரது நற்கருமம்.

இனி இவர்களால் இதர ஜனங்களுக்கு ஆகும் உதவியைக் குறித்துச் சிறிதுபேசுவோம். காட்டிலாகாச் சிப்பந்திகள் காடுகளுக்குள் வேலைசெய்யப்போகும்போது இக்காடரென்ற வனவாசிகள் கண்டிராக்டர்கள் போல முன்வந்து பனைநாரெடுப்பதிலும் வாழைநாரெடுப்பதிலும் கவனஞ்செலுத்துகிறார்கள். இவ்வாறெடுக்கும் நார்களால் வெகுபலமான கயிறுகள் பின்னப்படுகின்றன. இவைகளுக்கு யானைக்கயிறுகள் என்றும் பெயர்; ஏனென்றால் காடுகளில் வெட்டப்பட்டிருக்கக்கூடிய பெருத்தமரத்துண்டுகள் மூன்று நான்கினை ஒன்றாகச் சேர்த்து இக்கயிறுகளால் கட்டிவிட்டால் யானைகள் அக்கயிறுகளைப் பிடித்துத்துதிக்கையினால்தூக்கி யாதொருசிரமமுமில்லாமல் கட்டைகளை எவ்விடத்திற் சேர்க்கவேண்டுமோ அவ்விடத்திற் கொண்டுபோய்ச்சேர்க்கின்றன. பின்னும் இவ்வனவாசிகள் தேன்கூடு பொறுக்குவதிலும் பசைசேர்ப்பதிலும், மெழுகுசேகரிப்பதிலும் மிகுந்ததிறமைசாலிகளாயிருக்கிறார்கள்; மரமேறுவதில் இவர்களுக்கு நிரம்பப் பரிச்சயமுண்டு; கொச்சிக்காடுகளில் 100 அடி உயரமும் 20 அடி சுற்றளவுமுள்ள மரங்களைக்காணக்கூடும். இத்தகையமரங்களில் இவ்வேடர் ஒரு நொடியிற் குரங்கேறுவதுபோல ஏறிவிடுவார்கள். உண்மையைச்சொல்லப்புகின் காடர்கள் மரமேறும்போது ஒருவன் கீழிருந்தாவது சற்றுத் தூரத்திருந்தாவது பார்த்தால் குரங்கு மரத்தின் மீதேறுவதாகக்கூறுவனேயல்லாது மற்றொன்றுங்கூறான்; செங்குரங்கென்று நினையான்; கருங்குரங்கென்றுதான்நினைப்பான். அவர்கள் தேன்கூடடிப்பதுவெகுவேடிக்கையாயிருக்கும். பகற்பொழுதெல்லாம் காட்டில் அலைந்துதிரிந்து எங்கெங்குத்தேன்கூடுகள் காணப்படுகின்றனவோ அவ்விடங்களிலெல்லாம் அடையாளமிட்டு வந்துவிடுவார்கள். பகற்காலம்போய்இரவில்நன்றாய் இருள்கவ்விய பிற்பாடு அவர்கள் தம் கைகளில்தீவர்த்திகளைக்கொளுத்திக்கொண்டு மரங்களிலேறித்

தேன்கூடுகளை அடிக்கிறார்கள்; இருள்கவ்விய பின் அவர்கள் தேன் கூடுகளடிக்கப்போவானேன், பகற்காலத்தில் ஏன் போகக்கூடாதென்றாலோ தேனீக்கள் தம்மைவந்துகடிக்காமலிருக்கும்பொருட்டேயாம். தேன்கூடுகள் இருக்கும் மரங்கள் ஒரேசெங்குத்தாய்க்கிளைகளின்றியிருக்குமானால் இச்சாதியர் அத்தகையமரங்களில் நீளநீளமாகக் கொப்புகளை அடித்துப் படிக்கட்டுகளைப்போல் கால்வைத்தேறுவதற்கும் இறங்குவதற்கும் அநுகூலமாகச்செய்துகொள்ளுகிறார்கள்.

## குடும்பவிவகாரங்கள்.

இனி இவர்களது குடும்பாதார வழக்கப்பழக்கங்களைப்பார்ப்போம். இக்காடர்கள் சூதுவாது செய்தலைச்சிறிதும் அறியார்; தம் ஜாதியரானாலும் வேறு ஜாதியரானாலும் தமக்கேதேனும் தீங்கு விளைத்தாலொழிய அவர்களிடமணுகார்; பண்டைக்காலப் பிராமணரையொப்ப இவர்கள் ஏகபத்னி விரதங்கொண்டவர்; ஆனால் ஒருவனது வாணாளில் கணவனாவது மனைவியாவது மாண்டுபோவாளாயின் பிழைத்திருப்போர் வேறு கணவனையாவது மனைவியையாவது தேடி மணந்துகொள்ளலாம் என்ற விதி அவருக்குள் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்ன சொற்பிறழார்; எடுத்தகாரியத்தைச் செய்துமுடிக்குந்தன்மையர்; பொய்பேசார்; மோசக்கருத்துடன் பிறரிடமணுகார்; வேலைசெய்வதிற்சிறிதும் பின்னிடார். அவர்கள் சவங்களைக்குழிவெட்டி நிலத்திற்புதைக்கிறார்களேயன்றித் தகனிப்பதில்லை. பகல் முழுவதும் வேலை செய்தாலும் அதனை அவர்கள் ஒரு பொருட்டாய் மதிப்பதுகிடையாது. எச்சுமையையும் தம்முதுகிலேயே சுமந்துபோகச் சித்தமாயிருப்பர். காடர் ஜாதியைச்சேர்ந்தமாதர்கள் சிற்சில விஷயங்களில் அந்தண ஜாதியாசார அனுஷ்டானங்களைச் செய்பவராயிருக்கிறார்கள். உதாரணமாக மாதர்கள் ரஜஸ்வலையாகுங்கால் அவர்கள் தனியேயொருகுடிசைக்குள் ஒதுங்கிவிடுகிறார்கள்; மூன்று தினங்கள் வரை அக்குடிசையினுள் ஆடவரெவரும் போவதில்லை; நான்காந்தினத்தன்று ஸ்நானமாடியபின்னரே அவர்கள் மற்றவரோடு சேர்ந்து உண்ணுதற்கு முன்வருவார்கள். இந்தமாதிரியே பிரஸவகாலத்திலுமாம். ஆனால் இந்துக்கள் 10- தினம் பிரஸவ அறைக்குள் இருப்பது வழக்கமெனின் காடர்

ஜாதி மாதர்கள் ஒரு மாதம் வரை ஏனையோர் இருக்கும் குடிசைக்குச்சற்றுத் தூரமாக வேறுகுடிசை போட்டுக்கொண்டு அதனில் தங்கியிருப்பர். சீர்திருத்தம் மிகுந்த நகரத்திலும் சங்கங்களிலும் வருதற்குச்சந்தர்ப்பமின்றி வனத்திலேயே வாணாட்களைச்செலுத்தும் இச்சாதியினர்க்கு இத்தகைய ஆசாரத்திருத்தக்கொள்கைகள் எங்கிருந்துவந்தனவோ அதுவே எமக்கு மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்றது.

பின்னும் தீட்டுள்ள ஸ்திரீயானவள் ஓராற்றிலாவது நீரோடையிலாவது ஸ்நானஞ்செய்வாளாயின் நீரோட்டத்தினூடேவரும் நீரை ஏனையோர் கொஞ்சநேரம் வரை தொடமாட்டார்கள்; ஏனென்றால் எங்கே தீட்டுத் தம்மைப்பற்றிவிடுமோ என்ற பின்புத்தியுடையோராவரவர்.

## அவர்களது கற்புநிலை.

காடர் ஜாதியினர் வனவாசிகளாயிருந்தும் அவர்கள் கற்புநிலை தவறாதவரென்று கூறப்படுகின்றனர். மணமானதொரு ஸ்திரீயிடம் மற்றவர் பாராட்டும் மரியாதையும், அம்மரியாதைக்குகந்தபடி அந்த ஸ்திரீ நடந்துகொள்ளுதலும் தன் பர்த்தாவைத் தெய்வமென்று பாராட்டும் அம்மாதர்களின் தன்மையும் நம்மிராஜதானியிலிருந்து ஒருவன்சென்று பார்க்குமிடத்து, கலியாணமென்பதைக் கனவிலுமறியாத இக்காடர் என்ற வனவாசிகளுக்குள் கற்பு நிலைமை எவ்வளவு ஆழமாய் வேரூன்றி யிருக்கிறதென்பதைப் பார்த்து ஆச்சரியமுறுகிறான். கொச்சிராஜாவின் ஆதீனத்தில் இக்காடர்கள் இருப்பவர்களென்றும், ராஜாவிடத்து இவர்களனைவருக்கும் மிகுந்த விசுவாசமுண்டென்றும் தெரியவருகிறது. ராஜாவானவர் அடவியின் மார்க்கமாய்ச் சுற்றுப்பிரயாணம் போகும் ஒவ்வொரு சமயத்திலும் இக்காடர்கள் அவருக்குவேண்டிய சகலவிதமான பணிவிடைகளையுஞ் செய்துகொண்டும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ராஜாவைப் பல்லக்கில் தூக்கிக்கொண்டும், சாமான்களை முதுகிற் சுமந்துகொண்டும் போவார்கள். இச்சாதியார் எப்போதும் கொச்சிராஜரை 'மாதே' என்று தம் தாய் ஸ்தானத்தில் குறிப்பிட்டழைப்பராம். ராஜாவும் இக்காடர்களுக்குத் தமது சுற்றுப் பிரயாணகாலத்தில் வயிறுநிரம்ப அன்னமளிப்பதும், வஸ்திரம் ஆபரணம் சீப்பு கண்ணாடிபோன்ற

*

சில்லறைச் சாமான்களைக் கொடுப்பதுமாய் அவர்களுக்கு உதவு வாராம். இவர்கள் அவ்வளவு தைரியத்தோடு வனத்தில் சஞ்சரிப் போராயிருந்தும் எவனுவது அவர்களைப் பார்த்துக் கடுஞ்சொல் சொல்லி விடுவானுனல் அவனுக்கு எதிரிடையாக ஒன்றுஞ் சொல் லாமல் தங்களுடைய இருப்பிடத்தை மட்டும் மாற்றிவிடுவாராம். இவ் விதமாக ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு ஓடும் இவர்களுக்கு தலைவராயினர்க்கு மூப்பன்மாரென்று பெயராம். சுவீகாரம் எடுத்துக் கொள்ளுவதாவது சுவீகாரம் வாங்கிக்கொள்ளுவதாவது அவர்களில் சம்பிரதாயங்கிடையாதாம். அப்படி ஏதாவது நடக்குமேயானல் மூப்பன்மார்களது சம்மதத்தை யனுசரித்தே நடத்தப்படுமாம். வேட்டையாடுவதிற் காடர்கள் திறமையுள்ளவர்; வேட்டையாடும் போது எவ்வெவ்விடத்தில் எவ்விதமாயிருக்க வேண்டுமென்பதை நன்குணர்ந்தவர். சென்ற மாதத்தில் இச்சென்னைராஜதானிக் கவர்ன ரான லார்டு ஆம்ட்தில் கொச்சிக்காடுகளின் வழியாகச் சுற்றுப்பிர யாணஞ் செய்தபோது அவருடன் கூடச்சென்ற ஷிகாரிகள் நாம் மேலே சொல்லி வந்த காடர் ஜாதியைச் சேர்ந்தவரென்றுஞ் சொல் லப்படுகிறது. கொஞ்சங் கொஞ்சமாய் இவர்கள் நாகரீகமடைந்து வருவது தற்காலத்திற்குரிய அறிகுறியே போலும்.

ல. அனந்தய்யர்.
"இந்துநேசன்" பத்திராசிரியர்.

---

# பாலமுது.

(சஙூஙூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

பாலிற் கலந்துள்ள பலவகைப் பொருள்களை அடியிற் கண்ட படியிருக்கப் பார்த்து அவற்றினளவைத்தனித்தனி எடுத்துச்சொல் லலாகும். பாலில் சற்றுப் புளிப்பைக் கொண்டதோர் திரவப் பொ ருளைக் கலந்தால் அது இறுகிப்போய் ஓர் வகை நீரிற்றங்குவதாயுள் ளது. கட்டியாக வுள்ள பாகத்தை ஓர் விதத் தயிராகவும் (curd) நீராகச் சற்றுப்பச்சைநிறம் பொருந்தியுள்ளதை ஓர் வித மோராக வும் கொள்வோம், பாலைச் சற்று நேரம் காற்றில் தங்கவைத்தால்

இவ்வாறே தயிராகவும் மோராகவும் பிரியப் பார்க்கலாம். தயிராக வுள்ளது யாது? மோராக வுள்ளது யாது? இவைகளைத் தேர்ந்தறிவோம். நமது தேகத்திலும், மிருகங்களினுடலிலும், தாவரங்களிலும் உடற்காதார முண்டாக்க வல்லதோர் கலவைப் பொருளிருக்கப்பார்த்தல் கூடும். அதன் பெயரை "ஆல்பியூமின்" (albumen) என்பர். அது பலவகைப் பொருள்களிலிருக்கக் காணலாம். கோதுமை, துவரை, பால், கோழியினது கரு (முட்டை) முதலானவைகளில் அவ்வால்பியூமின் (albumen) உளது. மயிர், நகம், தோல், மாமிசம் போன்றவைகளை எரித்தால் ஓர் வித நாற்றமும் சற்று மஞ்சள் நிறமும் பொருந்தியுள்ள வோர்வகைப் புகை கிளம்புகின்றது. அதில் நவச்சாரப் பொருளிருப்பதால் (ammoniacal substance) துர்நாற்றம் கிளம்புவதாயிருக்கிறது. நவச்சாரத்தில் (Ammonia) வெடியுப்பினிடத்துளதாகிய (Potassium nitrate or salt petre) தர்க்கியசமென்னும் (Nitrogen) எரிகின்ற விளக்கை யணைக்க வல்லதோர் வாயுப்பொருள் கலந்துள்ளதாகையால், இவ்வாயுப் பொருளைக் கொண்ட நவச்சாரம், வெடியுப்பு இவைகளைத் தர்க்கியசப் பொருள்களென்று (Nitrogenous matter) கூற வல்லோம். தர்க்கியசம் கலந்துள்ள பொருள்கள் பல வகையாகவிருக்கின்றன. மேற்கண்ட ஆல்பியூமின்னில் தர்க்கியசமிருக்கிறபடியால் அதையும் அவ்வாறே தர்க்கியசப் பொருளென்று கூறத்தகும். பாலைக் குறித்துச் சொல்லிவரும் இவ்விஷயத்தில் இனி ஆல்பியூமினைத் தர்க்கியசப்பொருளென்றே கூறி வருவோம். ஒவ்வோர் பொருளிலுமுள்ள தர்க்கியசப்பொருளுக்குத் தனிப்பெயர் கொடுத்துக் கூறுவர். கோதுமையி லிருப்பதை குளுடென் (Gluten) என்றும், பாலிலுள்ளதை கேஸியின் (Casein) என்றுங் கூறுவர். ஆதலால், பாலின்கண் கலந்துள்ளவையாக இதுகாறும் பார்த்து வந்த பொருள்கள் (1) நீர், (2) ஊன (Fat) ரஸங்கிரளாகக்கொண்டுள்ள வெண்ணெய் (butter), (3) தர்க்கியசப்பொருளாகிய கேஸியின் (casein) இவைகளையன்றி மற்றுமுள. அவையாவன:— (1) பாற் சர்க்கரை (Milk Sugar), (2) தாதுப்பொருள்களாலான உப்புக்கள். பால் சுயமாயிருக்குங்கால் சற்று இனிப்பைக் கொடுப்பது அதன் சர்க்கரைதான். மற்றும் செவ்வையாக உணவு கொடுத்துப் பாதுகாக்

கப்பட்ட பசுவினதுபால் சற்று உப்பாகவும் உருசிக்கவல்லது. இதன் காரணம் அதனுள் கலந்துள்ள உப்புக்களாம். பாலை வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்குங்கால் அடியில் வருமாறு நூற்றளவில் காணலாம். இது ரசாயன சாத்திரத்திற் கூறியது.

| | பெயர். | அளவு. |
|---|---|---|
| (1) | நீர் | 92·95 |
| (2) | தர்க்கியசம் (casein) | ·81 |
| (3) | வெண்ணெய் ஊனம் முதலியன (Butter) | ·24 |
| (4) | பாற் சர்க்கரை (Milk sugar) | 5·27 |
| (5) | உப்புக்கள் (Salts) | ·73 |
| | மொத்தம் | 100·90 |

மேற்கண்ட அளவுகள் வாயல்கர் (Doctor Voelckor) துரையவர்களால் இரசாயன பரீக்ஷையைக்கொண்டு நிச்சயிக்கப்பட்டவை.

## 1. பாலின் நீர்.

ஓர் கிண்ணத்திற் பாலைக்கொண்டு காய்ச்சினால் அதன் நீர் ஆவியாக மேலே செல்லுவதையும், அதனால் பால் அளவில் குறைந்து கன மடைவதையும் பார்த்து வருகிறோம். அதைப் பால்சுண்டுவதென்று சொல்லுவர். மேலும், பாலானது வெகு ஜலத்தன்மையடைந்துள்ளது. ஆகையாற்றான் பாலில் நீர் அதிகவளவைக் கொண்டிருப்பதென்று எளிதாகச் சொல்லவல்லோம். இரசாயனத்தால் அதன் அளவைச் சரிவரச் சொல்லலாம். மேற்கூறிய நீரினளவிற்கு அதிகப்பட்டால் பாலில் நீர் கலந்துள்ளது. அவ்வளவிற்குக் குறைந்தால் பாலில் வேறு பதார்த்தங்கள் கரைந்துள்ளன. பாலில் சர்க்கரையைக் கரைத்தால் பால் சற்றுக் கனமடைகிறது. ஆதலால் பாலினது சிறப்பைச் சோதிக்க அதன் நீர் வேண்டுமளவிருக்கப் பார்க்கவேண்டும். எப்பொழுதும் இரசாயன பரீக்ஷை செய்து வருதல் அனுகூலப்படாதாகையால் நமதறிவிற்கும் தோற்றத்திற்கும் பொருந்துமாறு பாலினது கனத்தையும் நீர்த் தன்மையையும் ஒருவாறு தேர்ந்து பழக்கத்தினால் நமது மனதில் தீர்மானிக்கவேண்டும்.

## II. தர்க்கியசம் (Casein),

நமது உடலிலுள்ள மாமிசத்தை யெரித்தால் தர்க்கியசம் (Nitrogen) கலந்துள்ளதாக ஓர் வகை துர்நாற்றத்தினின்றுந் தெரியலாகும். ஆகையால் உடன்மாமிசத்தில் தர்க்கியச முள்ளதென்று நிச்சயிக்கின்றோம். ஆகவே ஊன் அல்லது மாமிசம் வளர்வதற்குத் தர்க்கியசம் வேண்டுவதாயுள்ளது. அதனால் ஊனைத்தின்றானைப் பெருக்குவது முண்டு. நாமுண்ணும் பலவகைத் தானியங்களில் தர்க்கியச மிருத்தல் ஊனுக்கு ஆதாரமாகின்றது. பலவகைப் பருப்புகளில் தர்க்கியச மிருக்கக் காணலாம். நாம் உபயோகிக்கும் துவரையில் தர்க்கியசம் அளவுக்களவு அதிகமாயுள்ளது. துவரையினுள் பருப்பினும் அதன் மேலதாகிய தோலின்கண்ணுமுள்ள தர்க்கியசம் அதிகம். ஆதலாற்றான் துவரையினது சத்து அதன் தோலிலுள்ளதென்பர். இத்தகைய தர்க்கியசப் பொருள் பாலின்கண்ணு முள்ளது இப்பொருளை ஆங்கிலேயத்தில் கேஸீயின் (casein) என்பர். பாலில் சற்றுப் புளிப்பான பதார்த்தமொன்றைக் கலப்போமாகில் மேற் கூறிய தர்க்கியசப் பொருள் ஒன்றுசேர்ந்து இறுகிப் போகின்றது. இவ்வாறே நமது வீடுகளில் பாலைத் தயிராக்குங்கால் பாலின்கண், சற்றுப் புளிப்பான மோரைச் சேர்ப்பது வழக்கம். பின்னும் எலுமிச்சம் பழத்தின் (Lemon) புளிப்பான இரசத்தைப் பாலில் சிறிது சொட்டவிட்டால் சடிதியிற் பால் கடினமடைகிறது. கெட்டித் தன்மை யடைந்த பொருளாவது ஏறக்குறைய முழுதும் மேற்கூறிய கேஸீனே. நாமுண்ணு முணவுடன் கலப்பதாகிய தயிரில் கேஸீயின் சுயத்தன்மையிலில்லை. ஏனெனில் அதனுடன் நீரும், வெண்ணெயுங் கலந்துள்ளன. ஆயினுந் தயிரின்கண் கேஸீயின் அதிக அளவில் தங்கியுள்ளது. சீமை முதலியவிடங்களில் கேஸீயின் என்பதைக் கூடிய மட்டும் சுயமாகவே பிரித்து அதைச் சாதாரணமாகச் சொல்லி வரும் ஓர் விதப் பாற்கட்டி யாக்குகிறார்கள். அதை ஆங்கிலேயத்தில் சீஸ் (cheese) என்பர். இக்கட்டியை நீண்ட சதுர மமைந்துள்ள குச்சிகளைப்போல் (rectangular rods) அமைக்கின்றனர். அதன் நிறம் சற்று மஞ்சளும் சிவப்பும் கலந்தது போலுள்ளது. நிறத்தில் ஏறக்குறைய நாட்டுச் சர்க்கரையைப்

போல் காணலாம். தொட்டால் மெதுவாயும் வளைவதாயுமிருக்கும். மோந்தால் ஓர் வித நாற்றத்தை யுடையதாகப் புலப்படுகிறது. அந் நாற்றம் நமக்குக் கிடைப்பதாயுள்ள வெகு தாழ்ந்த விதமான நெய்யி னது நாற்றத்தினு மிழிவாகப் புலப்படுகிறது. நமது நாட்டில் சீஸ் என்னு மிப்பொருளைச் சாதாரணமாயுபயோகிப்பதில்லை. சீமை போன்ற விடங்களில் இதை நாம் நெய்யை உபயோகிப்பது போல் உபயோகிக்கின்றனர். ஆனல் நாமுபயோகிக்கும் நெய்க்குப் பிரதி, சீமைபோன்ற அன்னிய விடங்களில் வெண்ணெயைத் திரளா க உபயோகிக்கிறார்கள். ஆயினும் சீஸ் என்னுந் தார்க்கியசப் பொரு ளில் அளவுக்களவு தயிரினுமதிகமடங்கு கேஸீயின் இருப்பதால் அஃதோர் சிறந்த ஊண் பண்டமாகக் கருதலாகிறது. சீஸ் என்பது நன்றாகக் கடித்துண்ண வேண்டுவதாய்த்தோன்றும். நமது நாட்டில் விலைக்குத் தக்கபடி உயர்வான நெய் கிடைப்பது போலவே வெளி நாடுகளில் விலைக்குத்தக்க சீஸ் என்னும் தார்க்கியசப்பொருள் கிடைக்கக்கூடியதுதான்.

பாலின்கண் கேஸீயின் என்னும் தார்க்கியசப் பொருள் வெகு வாய்க் கலந்து பெறும்பொருட்டுத் துவரையின் மேற்றோலைப் பசு விற்கு ஆகாரமாகக் கொடுத்தல் நலமென்பதை அறியலாகின்றோம். நமது உடற்கு வலிமை கொடுக்கும் ஜீவதாதுப் பொருள் தார்க்கிய சமாகையால் கூடிய வரையில் தார்க்கியசம் பெற்றுள்ள கேஸீயின் என்னும் பாகமானது பாலின்கண் சிறக்கக் காண்ட லியல்பு.

## III. வேண்ணெய் (ஊனம்) Butter.

எண்ணெயைப் போன்றதாகும் வெண்ணெயென்று முன்னமே கண்டோம். நீரில் சற்று எண்ணெயை வார்த்துக் கலக்கினல் எண் ணெயானது வெகுசிறு பொடிகளாய் எவ்வாறு நீரின்கண் விரவி யுள்ளதோ அவ்வாறே வெண்ணெயும் பாலில் எங்கும் விரவியுள்ளது. இத்தகைய வெண்ணெயினது விரவியதாந்தன்மையை ஆங்கிலேயத் தில் (emulsification) என்பர். சூரியனது காந்தி இப்பொடிகளி ன்மீதே பிரதிபலித்தலால் பால் வெண்மை நிறம் பொருந்தியுள் ளது. வெண்ணெய்த் தூள்களிலொன்றைக் கொண்டு பரிசோதிக் குங்கால் அத்தூள் இரண்டு விதப் பாகங்களைக் கொண்டுள்ளதாக

க்காண்கின்றன. எவ்விதமெனில் மத்தியில் அதாவது நடுவிடத்தில் ஊனப்பொருளாகிய வெண்ணெயும் அதைச் சுற்றி வெகு மேலிவடைந்த நுண்ணிய தோலுமாம். ஆதலால் ஒவ்வோர் வெண்ணெய்த்தூளும் வெண்ணெய்யும், வெண்ணெயைச்சுற்றியுள்ள தோலுமாக விளங்குகின்றது. ஓர் பெட்டியின்கண் அடங்கியுள்ளபணம் போலத் தோலாகிய பெட்டியினுள் வெண்ணெய் அகலாமற் பொருந்தப் பார்க்கின்றோம். இத்தகைய வெண்ணெய்த் தூள்கள் எங்கும் விரவியுள்ள பாலைக் காய்ச்சினால் உஷ்ணத்தால் பாலினது நீர் நீராவியாகக் கிளம்பி மேலெழுவதுமன்றி வெண்ணெயினது தோலும் உடைபட்டு ஒன்று சேர்ந்து ஏடாகப் பாலின்மேல் மிதக்கின்றது. இவ்விதப் பாலின் ஏட்டை ஆங்கிலேயத்தில் தோலென்று பொருள்பட (Skin of the Milk) என்பர். வெண்ணெயைப்போல அதன் தோலும் வெகு இலேசானதுபற்றிப் பாலின் ஏடானது மேலெழும்பி மிதப்பதாயுள்ளது. மற்றும் வெண்ணெயைப்போல அதன்தோல் இளகிய தன்மையால் பாலின் ஏட்டைச் சற்றுக்கடித்துத்தானுண்ண வேண்டுகின்றோம்.

பாலைக் காய்ச்சாமல் அதனின்றும் பெறவல்ல வெண்ணெயைப் பச்சை வெண்ணெயென்று கூறுவது வழக்கம். இவ்வாறே பச்சை மோரென்றும் சொல்லி வருவார்கள். நமது நாட்டில் காய்ச்சாத பாலினின்றும் பெறவல்ல வெண்ணெய், மோர் ஆகிய இவைகளைச் சிறப்பாகக் கருதுவதில்லை. ஏனெனில் இவ்வெண்ணெயில் வெண்ணெயைச் சுற்றியுள்ள தோலுடன் ஓர் விதப் பசுமையான நாற்றத்தைப் பெறுகிறோம். இந் நாற்றம் நமது வழக்கங்களுக்கும் ஆசாரத்திற்கும் பொருந்துவதில்லை. மற்றும் இத்தகைய வெண்ணெய் சுயவெண்ணெயுமல்ல. பாலைக்காய்ச்சி யதன்பின் நாம் பெறவல்ல வெண்ணெயானது நமக்குச்சரிவரத் தோன்றும் ஓர்வித நன்னாற்றத்துடன் நெய்யெடுப்பதற்கு நன்றாக உதவுகின்றது. தோல் நீங்கப்பெற்ற அதாவது ஏட்டினின்றும் விடுபட்ட இவ்வெண்ணெயானது சுயமாயுள்ளது.

(இன்னும் வரும்.)

செ. வீ. இராஜகோபாலாசாரி,

நார்மல்ஸ்கூல், மதுரை.

# ஸ்ரீமத்-தாயுமானசுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும்.

சோழநாட்டின்கண் பாடல்பெற்றஸ்தலங்களுட்சிறப்புற்றோங்கிய திருமறைக்காடென்னுந் தென்மொழிப்பெயர்பெற்ற வேதாரணியம் என்ற திவ்வியக்ஷேத்திரத்தில் சுமார் இருநூற்றுமுப்பது வருஷங்களுக்குமுன் வேளாண்குலத்துத்தோன்றிய கேடிலியப்பப் பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளின் முதிர்ந்து சிவபக்தி அடியார்பக்தியிற் சிறந்து வேதங்களாற் பூசிக்கப்பெற்ற தம்மூர்ச் சிவன்கோயிற்றருமவிசாரணைத்தொழிலில் அமர்ந்திருந்தனர். அப்போது விஜயநகர ராஜ்ஜியத்தின் பிரதிநிதியாய் மதுரை முதலிய தென்னாடாண்ட திருமலை நாயகருக்குப் பவுத்திரராய்த் திரிசிரபுரத்திற்றங்கிச் சோழநாட்டையும் பாண்டியநாட்டையும் கி. பி. 1704-வருஷ முதல் 1731-வருஷம் வரையில் அரசாண்ட விஜயரங்க சொக்கநாதநாயகர்[1] என்பவர் கேடிலியப்பப்பிள்ளையவர்களின் திறமையினையுங் குணத்தையுங் கேள்வியுற்று அவர்தமை வரவழைத்து அவர் தமக்குப் பெரியதோருத்தியோகந் தந்து தம்மிடத்திலே அவரையமர்த்திக் கொண்டனர். பிள்ளையவர்களும் தம்மரையன் மகிழ்வுறுமாறு இராஜாங்ககாரியத்தைச் செவ்வனே நடாத்திக்கொண்டுவந்தனர். வேதாரணியத்திலேயிருந்த தமது தமையனார் சந்ததியின்றித் துயருறுவதுகண்டு தம்முடைய அருமைப்புதல்வராகிய சிவசிதம்பரப் பிள்ளையைத் தமையனாருக்குச் சுவீகாரமாகக்கொடுத்து விட்டார். தாம் கதிபெறத் தமக்குமோர் புத்திரன் வேண்டுமென்னும் விருப்பத்தால் தக்ஷிண கயிலாயத்துள் ஒன்றாகிய திரிசிரமலைக்கண்ணெழுந்தருளியிராநின்ற தாயுமானேசுரரைத் தினந்தோறும் திரிகரணத்தாலும் தம் தேவிசகிதம் வழுத்தி வருவாராயினர். சின்னாளிலேயே சிவனது திருவருளால் தம்மனைவி வயிறுவாய்த்தனள். பத்துத் திங்கள் செல்லலும் தம்மூர் சேர்ந்திருந்த தம்மனைவியார்

1. See page 60, South Indian Dynasties, by Robert Sewell. இதனையாய்ந்தறியாது முத்துவிஜய ரகுநாத சொக்கலிங்கநாயகர் என்றும் வேறுசிலநாயகரென்றும் எழுதியுள்ளார் சிலர்.

ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அவர் தமக் த் தநயன் பிறந்ததலம் திருமறைக்காடாயினும் திரிசிரபுரத் தீசரது திருவருளாற்றேன்றியதனால் அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் பெயரே இடப்பட்டது. இக்குழந்தைக்குத் தக்ககாலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கவே, சின்னாளிலேயே வடமொழி தென்மொழிக்கணுள்ள இலக்கியவிலக்கணங்களையும் வேதாகமஸ்மிருதிபுராண இதிகாச முதலியனவற்றையும் நன்குகற்று மிக்க வல்லவராயினர். இவையேயன்றித் தேவார திருவாசக முதலிய பன்னிரண்டு சைவத் திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரமெனப் பேர்பெற்ற பதினன்கு சித்தாந்த சாத்திரங்களையும் அருணகிரிநாதரருளிய திருப்புகழையும் பாராயணஞ் செய்து வருவாராயினர். இவர் இருமுது மொழியினும் மிகுந்த பயிற்சியுடையாரென்பது பின்வரும் இவருடைய செய்யுளாற்றெரியவரும்.[2]

கல்லாதபேர்களேநல்லவர்கணல்லவர்கள்கற்றுமறிவில்லாதவென்
கர்மத்தையென்சொல்வேன்மதியையென்சொல்லுவேன்கைவல்யஞான [நீதி
நல்லோருரைக்கிலோகர்மமுக்கியமென்றுநாட்டுவேன்கர்மமொருவ
னுட்டினலோபழையஞானமுக்கியமென்றுநவிலுவேன்வடமொழியிலே
வல்லானொருத்தன்வரவுந்த்ராவிடத்திலேவந்தாவிவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரினங்ஙனேவடமொழியின்வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையுமருட்டிவிடவகைவந்தவித்தையென்முத்திதருமோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்றவித்தகச்சித்தர்கணமே.

தாயுமானவர் மிக்க இளமையிலேயே அவர் தம் தந்தையினும் பல்லாற்றானும் சிறப்புற்றிருக்கிறதை அரசன் கேள்வியுற்று மிக்க மகிழ்வுற்றனன். தாயுமானவர் தமக்குப் பதினறுண்டு நிரம்பு முன் தமது தந்தையார் சிவசாயுஜ்யமுற்றபிறகு உடனே அரசனது பலாத்காரத்துக்கிணங்கித் தகப்பனருடைய உத்தியோகத்தைத் தாம் வகித்துக் காரியங்களைச் செவ்வனே நடாத்தி வந்தார். இவ்வாறு லௌகிகத் தொழிலையேற்று நடத்திவந்தபோதிலும் அவரது மனமோ ஆன்மஞானம் பெற்று உயிர்க்கோருறுதிதேடும் வழியை நாடிநின்றது. இவர்க்கு இருவினையொப்பு நேருங் காலமாதல்பற்றி உண்மையாராய்தலே ஒருபெருங் கடமையெனத் தோற்றிற்று; அா

2. சித்தர்கணம், பாட்டு-10.

*

சனிடத்தில் பரிசில்பெற விரும்பிவரும் பண்டிதர், பாரதி, பாவலர், கவி, கவிராஜர், கவிச்சக்கரவர்த்தி, நாவலர், வித்துவான், மஹாவித்வான், வித்வசிரோமணி முதலிய பலவிதப் பட்டங்களைத் தரித்தவர்களையும் தம்மருகழைத்து அவரோடு யதார்த்த வாதஞ் செய்து தாம் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க சமாதானஞ்சொல்ல வல்லமையின்றி அவர்களிருப்பதைக் கண்டு "ஐயன்மீர்! ஆய்ந்து உண்மை காணுதிர்" என விடுப்பர். இவர் தாமும் தமது சந்தேக விபரீதங்களைத் தீர்க்கக்கூடிய ஞானசாரியர் எங்குளர்? எப்போது நமது கண்ணுக்குப் புலப்படுவர்? என்று மனமுழைந்து எதிர்பார்த்த வண்ணமாயிருந்தனர்.

அப்படி இருக்கு நாளில் உலகமுய்யுமாறு சித்தாந்தப்பொருளைத் திருமந்திரத்தாற் காட்டிய திருமூலநாயனர் மரபிலுதித்துத் திருக்கயிலாயபரம்பரைச்சந்தானகுரவருள் ஒருவராய மெய்கண்டதேவரது வழித்தோன்றிய குரவரொருவரிடத்து ஞானேபதேசம் பெற்ற சற்குருமூர்த்தியாகிய மௌனகுருசுவாமிகள் திரிசிரபுரத்திற் கோயில் கண்டருளிய தாயுமானேசுரரைத் தரிசிப்பான் திரிசிரபுரம் போந்தனர். குருசுவாமிகளைக் கண்ட போதே நமது தாயுமானவர் தன்வயமிழந்து, அவர் வயப்பட்டு, அடியற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை நமஸ்கரித்து "ஐய! எம்பெரும! தமது திருக்கரத்திலுள்ள புத்தகம் யாது?" என்றிரந்தனர். மௌனகுருசுவாமிகள் யாதொன்று முரையாமல் மௌனமாயேகினர். இவரும் மேன்மேலும் இரந்து அவரைப் பின்றொடர்ந்தனர். மௌனகுருசுவாமிகள் இங்ஙனங்குஞ் சென்று இறுதியில் நடுநிசிவேளையில் தாயுமானேசுரர் கோயில் புக்கு பத்மாசனமிட்டு உட்கார்ந்தனர். உட்கார்ந்ததும் எதிரிற் கைகட்டி வாய்பொத்தி நின்ற தாயுமானவரைக் கண்டனர். பின்பு அருள் நோக்குடன் குருசுவாமிகள் தாயுமானவரைப் பார்த்து அவர்மனத்தை அறிந்த பின்னர், எனது கையில் உள்ளது சிவஞானசித்தி என்றனர். ஐயமுற்ற சீடரும் சற்று மயங்கி நின்று, ஐய! தயாநிதி!

1. சிவம் யாது?
2. ஞானம் என்பது எது?

3. சித்தியாவது யாது? என்று வினவ, ஆசாரிய சுவாமிகள் ஏ. மாணவ!.

1. சிவம் என்பது பதி.
2. ஞானம் என்பது (அந்தப்பதியையுள்ளவாறறியும்) அறிவு.
3. சித்தியாவது அவ்வறிவை யநுவியது என்றூர்.

தாயுமானவர் தமக்கிருந்த ஐயங்களை யெல்லாம் குருசுவாமிகளிடம் வெளிப்படுத்தவே அவர் இவருடைய பக்குவத்திற்குரிய தீக்ஷை செய்து, மாணவ! நின்னகத்துநிகழ்ந்த ஐயங்களை யறுத்து விபரீதங்களை விட்டி உண்மையறிவாகிய அத்துவித ஞானத்தைக் கொடுப்பது இந் (சிவஞானசித்தியார்) நூலேயாம்; இது சந்தானகுரவருள், சகலாகமபண்டிதர் என்னும் அருணந்திசிவாசாரிய சுவாமிகளால் அருளப்பட்டது. சிவஞானபோத வழிநூலாகிய இது, வேதாகம சாரமாகிய சித்தாந்தவியல்பினை எடுத்துத் தாபித்தலாற் **சுபக்கம்** என்றும், அதற்கு ஒவ்வாதவாயுள்ள சமயக்கொள்கைகளை எடுத்துக் கண்டனஞ்செய்தலாற் **பரபக்கம்** என்றும் சொல்லப்பட்ட விருபகுதிகளை யுடைத்து.

[3]"பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோதும்"

என்று சித்தியாரையும் மற்றுமுள்ள சித்தாந்த சாத்திரங்களின் பொருணுட்பங்களையும் சாங்கோபாங்கமாக உபதேசித்தருளினர். இதனுனே, வைதிக, சைவ, சுத்தாத்துவித சைவசித்தாந்தமே உண்மை நிலை யென்பதும் சிவபெருமானே பரமபதி யென்பதும் அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தி யென்பதும் அறிந்தார். குரு சுவாமிகள் இவரை நோக்கி 'இங்கு இன்னுஞ் சில காலமிருந்து இல்லறத்தொழுகிப் புத்திர சந்தானம் பெறுதி; பின்னர் யாம் வந்து கிட்டைகூடு மூபாயம் தெரிவிப்போம்' என்று சொல்லிவிட் டேகினர். குருவின் பிரிவை யாற்றுது வருந்தி நின்ற தாயுமானவரை நோக்கி மௌனகுருசுவாமிகள் 'சும்மா இரு' என்று சொல்லிப் போய்விட்டனர். அச்சொல்லும் சொல்லின் பொருளும் அவரும் அவர் மனத்தை விட்டகலவேயில்லை. என்னை?

---

3. "பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ."
தருமரபின் வணக்கம், பாட்டு-5.

ஐந்துவகையாகின்றபூதமுதனைத்துமடங்கவெளியாகவெளிசெய்
தறியாமையறிவாதிபிறிவாகவறிவார்களறிவாகநின்றநிலையிற்
சிந்தையறநில்லென்றுசும்மாவிருத்திமேற்சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநானதுவாயிருக்கநீசெய்சித்ராமிகநன்றுகாண்
எந்தைவடவாற்பரமகுருவாழ்கவாழவருளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழவேதாகமத்துணிபிரண்டில்லையொன்றென்னவே
வந்தகுருவேவீறுசிவஞானசித்திநெறிமௌனேபதேசகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்மரபில்வருமௌனகுருவே.

என்னும் மௌனகுரு வணக்கத்துள்ள இச்செய்யுளையும்[4] ஆங்காங்கு மற்றைச் செய்யுட்களில் எடுத்துக் கூறியிருப்பனவற்றையும் உற்றுநோக்குக.

ஆசிரியர் சென்றதும் தாயுமானவர் தாம் உபதேசம் பெற்றவைகளைச் சிந்தித்து அவ்வாறு ஒழுகிவரலால் விரக்தி தோன்றிற்று. தோன்றவே லௌகிகத் தொழிலை அறவே மறந்தனர். அரசன் இவருடைய குணங்களை அறிந்திருப்பவனுதலாலும் நாளுக்குநாள் அவர் ஆன்ம ஞானம் பெற்று முதிர்ச்சியடைந்து வருகிறார் எனக் கேள்விப்பட்டுமிருக்கிறபடியாலும் அவர்பால் அன்பும் அச்சமுமீதூர அவரை அணுகி "சுவாமி, தேவரீரது பெருமையை அறியகில்லாது நிரந்தரமில்லாத இந்த லௌகீகத்தொழிலில் தங்களையமர்த்தினேன்; தேவரீருக்கு யானே எல்லாஏவலும் புரியும்படி கட்டளையிடுமின்" என்றிரந்து நின்று அன்றுமுதல் அவர்மனம் மிகவும் சந்துஷ்டியடையும்படி நடந்துவந்தான். சின்னாளில் அரசனும் இவ்வுலகைநீத்தான். அரசனது மனைவியாகிய மீனாக்ஷியம்மையோ[4a] இவரைப் பன்முறையும் பார்த்துளாளாகலின், கண்கவர்வனப்பினர் இவரை நிகர்த்தவர் வேறெவரையுங்காணது இவர்மீது காதலுற்று இவரை வரவழைத்து "என்னிராஜ்ஜியத்திற்குத் தேவரீரைத் தலைவராக்குவல்; என்னுடல் பொருள் ஆவி மூன்றுந்தந்துவிட்டேன்." என்னலும் அவளது எண்ணமின்னதென அறிந்து அவளுக்கு எவ்வாறு

4. மௌனகுருவணக்கம், செய்யுள்-2.

4a. தன்னயகன் இறந்தபின்னர் மீனாக்ஷியம்மைதான் தனியரசாண்டனள். (1731—1736). See page 61, South Indian Dynasties by Robert Sewell.

புத்திபுகட்டவேண்டுமோ அவ்வாறு இதோபதேசம் செய்து பிறகு அவ்விடமிருந்தால் தன்பெருமைக்குச் சிறுமைவருமென்றஞ்சி அதைவிட்டு இராமநாதபுரத்திற்கருகிலுள்ள தேவைநகரிற் சென்று உறைந்தனர் [5]. இதனைக் கேள்வியுற்றுத் தமது தமையனாராகிய சிவசிதம்பரப்பிள்ளையவர்களும் தமதுசிறியதாயார் குமாரராகிய அருளையப்பிள்ளையவர்களும் இராமநாதபுரஞ்சென்று பிறகு அவரையணுகி சந்ததிவிளங்கும்படி திருமணஞ்செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். சம்சாரபந்தத்திற் கட்டுண்டிருப்பதற்கு அவருக்கிஷ்டமில்லாமற்போனபோதிலும் மௌனகுருசுவாமிகள் ஆஞ்ஞையையும் தமையனாரது வேண்டுகோளையும் நிராகரிப்பதற்கில்லாது மன்றல் புரிந்து மனையாளொடு மில்லறநடாத்த இயைந்தனர். அவர்தேவியும் ஓராண்குழந்தையைப் பெற்றபின் சிவபதமடைந்தனர். அக்குழந்தைக்குக் கனகசபாபதி என்னும் பெயரிடப்பட்டது.

முன் தாயுமானவரைவிட்டுப் பிரிந்த குருசுவாமிகள் மீட்டும்வந்து சிடர்பக்குவத்தைக் கண்டு சரியையும் கிரியையும் கடந்து யோகபாதசோபானமுற்றதையறிந்து அதற்குரிய தீட்சைசெய்து, யோக[6] நிஷ்டைகளினியல்புகளை உணர்த்தித் துறவுபூணும்படி ஆஞ்ஞாபித்துச்சென்றனர். அன்றுமுதல் தாயுமானவர் கௌபீனதாரியாய் வெளிப்பட்டு, இயமம், நியமம், ஆதனம் பிராணாயாமம் என்னும் யோகத்திற் சரியையும், பிரத்தியாகாரம், தாரணை என்னும் யோகத்திற் கிரியையும், தியானமாம் யோகத்தில் யோகத்தையும், சமாதியாம் யோகத்தில் ஞானத்தையும் முறையேயனுட்டித்து சிவஞானப் பெருஞ்செல்வராய் நிட்டைகூடுவாராயினர். இவர் 1742ஆ இராமநாதபுரத்திற்கருகிலுள்ள தேவைநகரில் சமாதியிலமர்ந்தனரென்ப [7]

(இன்னும் வரும்).

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

5. "மலைவளர்காதலி" என்னும்செய்யுட்டொடர்நிலையிலும் தேவைநகரிலுள்ள தேவியைக்குறித்துப் பாடியது.

6. யோகமாவது அகத்தொழிலின் மாத்திரையானே ஈச்சுரன் அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

7. See foot note, (5).

# தனிச்செய்யுட்கோவை.

(தொடர்ச்சி)

ஓர் கவிஞரைக் கள்ளரடித்துப் பொருளைப்பறித்துக்கொள்ள அப்பொழுது முல்லைத்தாண்டவராயபிள்ளை யென்னும் பிரபுவின் பால்வந்து அவர் கூறியது:—

ஆகாத கள்ள ரடித்துப் பறித்தமுதல்
போகாது போகாது போகாது—வாகார்
சதுரனைத் தென்முல்லைத் தாண்டவரா யேந்தர
விதுரனைவாங் காமல் விடேன்.

---

பாவவிநாசத்தில் உலகம்மைபேரில் விக்கிரமசிங்கபுரம் நமச்சிவாயக்கவிராயரவர்கள் கூறியகவிகள்.

என்பா லிரங்கா திரும்பால் மனம்படைத்த
வன்பா லறப்பால் மறப்பால தாகாதோ
வன்பால் முலைப்பா லமும்பால னுக்களித்த
வுன்பா லடைந்தே னுலகுடைய மாதாவே.

ஓலையிட்ட வினையடி யென்றனக் குண்ணச் சோறிட் டெனைப்போற்ற நீயொரு, வேலையிட்டு நடத்தா திதற்கொரு வினையமிட்டதோர் வெவ்வினைக் கென்செய்வேன், காலையிட்ட கலியாணப் பந்தரிற் கடகமிட்டசெங் கையாலென் னையர்க்கு, மாலையிட்டபெண் பிள்ளாய் செழுந்தமிழ் மலையச்சாரலில் வாழுல கம்மையே.

---

காளமேகப்புலவர் வேலூர்க்கம்பனென்னுங்கொல்லனை வியந்து கூறியது.

கன்னனரை நாட்கொடுப்பான் காவேரி பாதிநா
ளென்னை முலைகொடுப்ப தக்காலம்—பன்னுங்
கலையார்ந்த வேலூர்வாழ் கம்பனெனுங் கொல்ல
னுலைவைத்தாற் றூனருண் கும்.

---

## தனிச்செய்யுள்கள்.

காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனு
மாலையெரி போன்ற வயலானுஞ்—சால
மனைக்கட் டழிக்கு மனையாளிம் மூன்றுந்
தனக்கட் டமத்துச் சனி.

அந்நாட் புலவர்கவிக் காயிர மைஞ்ஞூறு
பொன்னுங் கவிதை புனிதமா—மிந்நாளில்
வாசமற்ற தோசியெனு மாந்தர் தலையெடுக்கக்
காசுக்கைஞ் ஞூறு கவி.

வெள்ளிலைவே லற்பநிழல் மெத்தவே முட்டைக்குந்
துள்ளுநரு வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
வடுக்கவொட்டா வாறுபோ லற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமுங் கொடார்.

பார்த்துப் பார்த்திரு கண்களும் பூத்தன பாடிப்பாடியென் னாவுஞ் சலித்தது
காத்திருந்து மனமும் வெறுத்தது காலிரண்டு நடந்து வலித்தன
வாத்திரத்துக் குதவா வுலுத்தரை யான்வணங்கித் துதித்திட னீதியோ
சேத்திரத்தி லுயர்பழ னாபுரிச் சேயனேயென் றனக்கருள் செய்வையே.

---

### படிக்காசுப் புலவர் கூறியது.

அஞ்சாலிச் சாதியும் வண்ணானுஞ் செட்டியு மம்பட்டனுஞ்
செஞ்சாயக் காரனும் வேசைச் சுதருந் தினங்கவியைப்
பஞ்சாகத் தூற்றி யரைக்காசுக் கோர்கவி பாடுவதால்
நஞ்சாகப் போயிற்றி ராசாக் களுக்கெங்க ணற்கவியே.

---

### சேதுபதிமந்திரி முத்திருளப்பபிள்ளை கூறியது.

கண்ட கனவிலிம்மிக் காசளவே னுங்களவி
னுண்டு செலுத்திடநா னொட்டுவனோ—மண்ணிற்
றிருமுத்தி ராமலிங்கச் சேதுமதி மந்த்ரி
தருமுத் திருளப்பன் றான்.

---

குப்பச்சியென்பவள் செய்த உபசாரத்தை வியந்து ஓர்கவிஞர் கூறியது.

சோற்றை யரிசிலைமேற் றூவி வழுதுணங்காய்ச்
சோற்றை யதன்மேற் கிடத்தியே—வாற்றியுண்ணு
மப்பச்சி யென்பா ளருமையா சேயென்பாள்
குப்பச்சி யாயி குணம்.

மல்லைச் சிற்றம்பலம்பிள்ளைமீது ஓர் கவிஞர் கூறியது.

காசா கிலுங்கற்ற பேர்க்குத வாத கசடர்தமக்
காசார மென்ன முழுக்கென்ன பூசைக ளாவதென்ன
சீசா கவுமறி யார்கரம் போலத் திரிவர்நல்ல
பூசா பலாமல்லை வேந்தாசிற் றம்பல பூபதியே.

இக்கவி சிவகங்கையாண்ட மருதுபாண்டியனை நோக்கி ஓர் கவிஞர் கூறியதாக வழங்குகிறார்கள். கருத்து விளங்கவில்லை.

ஒருபுருடன் றனக்கிரண்டு மனைவிகளி லொருத்தியக முடையாள் சிந்தை
வாநடந்து பதினாறு பிள்ளைபெற்றே யகமகிழ்ந்தாண் மற்றொருத்தி
யிரவுபகல் புருடன்முகம் பாராமற் கற்பழியா திருந்தாள் பிள்ளை
கருதிநொந்து பெற்றவட்கோ மற்றவட்கோ மருதேந்த்ர கழறுவாயே.

ஓர் கவிஞர் சிவந்தபல்லவனென்னுமோர் பிரபுவின்மீது தலைவி கூற்றாகக்கூறியது.

குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த பல்லவனைக் கூடா நாளி
லிளக்கார மோபிரிந்த வாறுகண்டோ நானேழை யென்று தானோ
வுள்க்காத றாண்டுகோல் பனிநீர்நெய் யானுறங்கு மூச னல்ல
விளக்காக வெனைத்திரியா விடியுமட்டு மெரித்தனையே வெண்ணிலாவே.

சவ்வாதுப்புலவரை வியந்து ஓர்கவிஞர்கூறியது.

வெண்டா மரையனந்தான் வேறுருக்கொண் டுற்றனளோ
தண்டா மரையனந்தன் றுனிவனோ—வண்டமிழி
னெண்ணோ வெழுத்தோ யிசையோ வியற்புலவர்
கண்ணோசவ் வாதுக் கவி.

இரண்டாமடியில், தாமரையன்—பிரமன். நந்தன்—திருமால்.

யானைப்பாகனாகிய திருமலைராயன் கவியைவியந்து ஓர்கவிஞர்கூறியது.

தேமணக்குங் கோடிவருந் திருமலைரா யன்றமிழைச் செப்பும் போது
நாமணக்குஞ் செவிகுளிரு மகமலரு மெழுதிவைத்த நல்லே டெல்லாந்
தாமணக்கு மரப்பாவை நடனமிடுஞ் சீவன்மரந் தளிர்க்குஞ் செஞ்சொற்
பாமணக்கு மண்மேலிவ் வுலகெல்லாஞ் சிட்டைகட்டிப்பறக்குந் தானே.

சீவன்மரம்—வெட்டுகெட்டை.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்,
**இராமசாமிக்கவிராயர்.**

ஸ்ரீ:

# திருமங்கையாழ்வார் காலவாராய்ச்சி.

இதற்கு முன்பு யாம் "செந்தமிழ்"ப் பத்திரிகையில், "பொய்கையார்" என்னுந் தலைப்பின்கீழ் முதலாழ்வாரைப்பற்றிய சில விசேடங்களையும், "பெரியாழ்வார் காலநிருணயம்" என்னுந் தலைப்பின்கீழ் திருமழிசைப்பிரான், சடகோபர், குலசேகரப் பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள்—இவர்கள் காலங்களையுஞ் சுட்டி இரண்டு வியாசங்கள் எழுதியிருந்தமை செந்தமிழபிமானிகள் பலர்க்குத் தெரிந்திருக்கலாம். அவற்றின் தொடர்ச்சியாக எஞ்சிய ஆழ்வார்காலங்கள், திருமங்கையாழ்வார்காலவாராய்ச்சிமூலமாக, இப்பகுதியில் ஆராயப்படுகின்றன.

குருபரம்பரை நூல்களில் தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், திருமங்கைமன்னன்—இம்மூவர்க்குங் கொடுக்கப்பட்ட காலவளவுகள் அடியிற் கண்டவை.

1. தொண்டரடிப்பொடிகள்—கலிபிறந்த 289-வது ஆண்டு.
2. திருப்பாணாழ்வார் ,, ஷை 342 ,, ,,
3. திருமங்கைமன்னன் ,, ஷை 397 ,, ,,

இக்காலங்கள் நிரம்ப அதிகப்பட்டிருத்தலால், இவற்றினுண்மையிற் பலர் ஐயப்படினும், இவ்வளவுகளால் நாம் அறியக்கிடக்கும் உண்மை ஒன்றுண்டு. அம்மூவர் காலங்களும் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டளவே ஏற்றத்தாழ்வு பெற்றிருக்கக் காணுதலால், அவ்வாழ்வார்கள் ஒருவர்க்கொருவர் மிகவும் சமீபகாலத்தில் விளங்கியவர்கள் என்று கருதலாம். ஒருகாலத்தவ ரென்பதற்கேற்ப, திருப்பாணாழ்வார் ஏனையிருவருடன் வாழ்ந்தவரென்பதற்குச் சரித்திரங் காணவில்லையாயினும், தொண்டரடிப்பொடிகளும், திருமங்கையாரும் ஒருவரையொருவர் நேரில் அறிந்திருந்ததாகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. திருமங்கைமன்னன், ஸ்ரீரங்கத்தின் நான்காந்திருமதிட்டிருப்பணி நடத்திவரும்போது, தொண்டரடிப்பொடிகள் வைத்துப் போற்றிவந்த துளசித்திருநந்தவனம் குறுக்கிட, அதற்கு யாதொரு பழுதும் நேராவண்ணம், அவர் தம் திருமதிலை அந்நந்தவனத்தைச் சுற்றிக்கட்டினரென்றும், இவ்வாறு தம்பால் அன்புகாட்டிய ஆழ்வார்க்குத் தொண்டரடிப்பொடிகள் தம் நன்றியை நேரிற் செலுத்

*

தினரென்றும் சொல்லப்பட்டுள்ளன. இனி இவர்கள் காலம் யாதென்று பார்ப்போம்.

ஸ்ரீமாந்- து. அ. கோபிநாதராயரவர்கள், M. A., வைணவாசிரியருள் தலைவரான நாதமுனிகள்காலத்தைப்பற்றித் தாம் எழுதிவரும் "ஸ்ரீவைஷ்ணவசமயசரித்திரம்" என்னும் வியாசத்தில் அடியில் வருமாறு கூறுகின்றனர்:—"இந்நாதமுனிகள் காலத்தைத் தீர்மானிப் "போம். ஆளவந்தார் வியோகமானகாலம் கி. பி. 1080-ஆம் ஆண் "டென்றோம; அவ்வாளவந்தார் நாதமுனிகள் பேரனர் என்றுங் "குறித்தோம்; ஆதலால் நாதமுனிகள் கி.பி. 990-ல் அவதரித்திருத் "தல் வேண்டும். மேலும், கி. பி. 1011-முதல் 1032-வரை ஆட்சி "புரிந்த கங்கைகொண்ட சோழனல் அவர் ஆதரிக்கப்பெற்று அவ் "வரசனுக்கு இராஜதானியாகவிருந்த கங்கைகொண்ட சோழபுரத் "துக்கு அடிக்கடி போக்கு வரவுடையராயிருந்தனர். அந்நகரம் "கி.பி. 1024-ம் ஆண்டிற்குப்பிறகு அவ்வரசனாலே உண்டாக்கப்பட் "டது. இதனாலும் நாதமுனிகள் காலம் 11-ஆம் நூற்றாண்டின் "முற்பகுதியென்றேற்படுகின்றது." என்பதாம்.

இவ்வாறு, 11-ஆம் நூற்றாண்டினரென்று நன்குதெளியப்பட்ட நாதமுனிகள், ஆழ்வார்கள் பன்னிருவரும் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தத்தை உலகிற்கு வெளியிட்டவரென்று சரித்திரங்கள் கூறுகின்றன. அன்றியும் இராமாநுஜர் காலத்தவரும், கூரத்தாழ்வான் சிஷ்யருளொருவருமானவரென்று தெளியப்பட்ட திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமாநுஜநூற்றந்தாதியில், 8-வது முதல் 21-வது வரையுள்ள பாசுரங்களில், நாதமுனிகளுக்கு முன் ஆழ்வார்களையெல்லாம் பரம்பரைமுறைப்படியேவைத்துப் பின்பு அம்முனிகளையும் ஆளவந்தாரையும் கூறுதலால், அவ்ஆழ்வார்கள் இவ்விருவர்க்கும் முந்தியவர்களென்பது நன்கு விளங்கும். (இவ்வமுதனார் கூரத்தாழ்வான் சிஷ்யரென்பதை இவரந்தாதியின் 7-ம் பாசுரமும் தெளிவுறுத்தும்.) அன்றியும் பெரியாழ்வார், ஆண்டாள்,குலசேகரப் பெருமாள்—இவர்கள் அருளிச்செயல்களுக்கு, நாதமுனிகளும் அவர் சிஷ்யர்களாகிய உய்யக்கொண்டார் மணக்காலநம்பிகளுமருளிய தனியன்கள் முறையே காணப்படுகின்றன. இத்தனியன்கள் அவர்கள் பாடியனவென்பது இன்றுநேற்றன்றித் தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபாதலால், அவை ஏனைய தனிப்பாடல்களைப் போன்றன ஆகா. இனி, நவீனர் சிலர், திருமங்கைமன்னன் முதலியோர், நாதமுனிகட்குப்பின் ஆளவந்தாரதுபதேசம் பெற்றவரென்று கூறுதல் சிறிதும் ஒவ்வாவுரையென்பது மேற்கூற்றுச்களால்தேற்றமாம். அவர் கூறுவது உண்மையானல், உடையவர்காலத்துக்குச் சிறிது முந்திய செய்திகளை யெல்லாங் கூறும் "திவ்யசூரிசரிதை" முதலிய

பழைய குருபரம்பரைகள், ஆளவந்தார்க்கும், ஆழ்வார்களிற் சிலர்க்குமுள்ள இவ்வரியபெரிய சம்பந்தத்தை விட்டொழிந்ததற்குச் சிறந்தகாரணம் வேண்டுமன்றோ! மூற்காட்டியவற்றால், நம் ஆராய்ச்சூரிய ஆழ்வார், நாதமுனிகள்காலமாகிய கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்கு முந்தியதோர் காலத்தில் எழுந்தருளியிருந்தவரென்பது தெளிவாகின்றது.

இனி, திருமங்கைமன்னன், 1800-வருஷங்கட்கு முற்பட்ட சங்ககாலத்துக்குப் பின்பே விளங்கியவனென்பது, அச்சங்ககாலத்தவனாகிய சோழன் கரிகாலன்வழியில்வந்த கோச்செங்கணானைத் திருநறையூர்ப்பதிகத்தில் அவர் புகழ்தலால் விளங்கும். இன்னும் சிறிதாராய்ந்துசெல்லின், கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தென்னாடு வந்து ஆட்சி தொடங்கியவராகத் தெரியும் பல்லவவரசரை அவ்வாழ்வார் தம் பாசுரங்களில் ஓதுதலால், அவர், அவ்வைந்தா நூற்றாண்டுக்குப் பிந்தினவரென்பதும் நிச்சயமாம். ஆகவே, கி. பி. 11-ஆம் நூற்றாண்டுக்கும், 5-ஆம் நூற்றாண்டுக்கும் மத்தியகாலமொன்றே திருமங்கைமன்னனுக்குரியதென்று விளங்கிற்று.

இனி, அக்காலந்தான் யாது என்று பார்ப்போம். ஸ்ரீஅப்பர் ஞானசம்பந்தமூர்த்திகள் காலங்களிற்போலவே இவ்வாழ்வார் நாளிலும் ஜைனபௌத்தர் கூட்டம் அதிக இமிசை செய்துவந்ததென்று அவர் பாடல்களால் தெரியவருகின்றது.* அன்றியும், திருமங்கை

---

* "பிச்சச்சிறு பீலிபிடித்துலகிற் பிணங்கின்மட வாரவர்போலங்ஙனே
அச்சமிலர் நாணிலாதன்மையால் அவர்செய்கைவெறுத்து."

"பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே."

"துவரித்த வுடையவர்க்குந் தூய்மையில்லாச் சமணர்க்கும்
அவர்கட்கங் கருளில்லா வருளானை."

"வந்திக்கு மற்றவர்க்கு மாசுடம்பில் வல்லமணர் தமக்கு மல்லேன்."

"வெள்ளியார் பிண்டியார் போதியா ரென்றிவ ரோதுகின்ற
கள்ள நூல் தன்னை."

"புந்தியில் சமணர் புத்தரென்றிவர்க ளொத்தன் பேசவு முகந்திட்
டெந்தைபெம்மானிமையவர் தலைவனெண்ணிமுன்னிடங்கொண்ட
(திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி). [கோயில்."

"புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாங்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோ."
"வெறுப்பொடு சமணமுண்டர் விதியில்சாக்கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள்பேசிப் போவதே நோயதாகி."
(தொண்டரடிப்பொடிகள் திருமாலை)

யார் பாசுரங்களில் அடிக்கடி பயிலும் பல்லவவரசர்பெருமையை * நோக்கின், அவர் அவ்வரசர் விளங்கிய காலமொன்றில் எழுந்தருளியிருந்தவரென்று தோன்றுமற்போகாது. இவ்விரண்டு காரணங்களும் திருமங்கைமன்னனது காலநிலையை ஒருவாறு சூசிப்பிக்கின்றதோடு, அவ்வாழ்வார் அருமைபாராட்டிக்கூறும் அரசர் செய்திகள் சில, அவர் இன்னகாலத்தவரென்று துணியுமாறு நம்மைத் தூண்டவுஞ் செய்கின்றன. எப்படியெனில், பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில், பல்லவவரசனொருவன் மண்ணை, நெல்வேலி, கருவூர் என்னுமிடங்களில் நிகழ்ந்த பெரும்போர்களிலே வெற்றிபெற்றவனென்று திருமங்கைமன்னன் புகழ்கின்றார்.† இப்போர்களை நோக்கும்போது அவை, கி. பி. 710-ல் ஆட்சிதொடங்கினவனாகத்தெரியும் நந்திபோத பல்லவமல்லன் செயல்களென்று விளங்குகின்றன. உதயேந்திரந் தானசாஸனத்தில் அந்நந்திபோதன் சேனாபதியாகிய உதயசந்திரனென்பான் மண்ணை, நெல்வேலி, விந்தியமலைத்தொடர்ச்சி என்னும் இடங்களில் மூன்றுயுத்தநடத்தி வென்றதாக வரையப்பட்டுள்ளது. இவற்றுள், மண்ணைப்போர் பாண்டியனொருவனுடன் நடத்தியது. அப்போரில், பாண்டியன் தனக்குரிய "காளிதுர்க்க" த்தை

---

* பரமேச்சுரவிண்ணகரப் பதிகம் முழுவதுங்காண்க.

"மன்னுதண்பொழிலும் வாவியுமதிளு மாடமாளிகையு மண்டபமும்
தென்னன் தொண்டையர்கோன் செய்தநன் மயிலை."

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீண்முடி மாலைவயிரமே
[கன்."

"பைம்பொன்னுமுத்து மணியுங்கொணர்ந்து படைமன்னவன் பல்ல
[வர் கோன்வணங்கும்."

"துளங்குநீண்முடி யரசர்தங்குரிசி ஸ்ரண்டைமன்னவன் திண்டிற
[லொருவற்கு."

† "நிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர்வே னெடுவாயிலுகச்செருவின் முனநாட் பரந்தவன் பல்லவர்கோன்."

"உலகுடைமன்னவன் தென்னவனைக் கன்னிமாமதிள்சூழ் கருவூர் வெருவப், பலபடை சாயவென்றான்."

"படைத்திறல் வில்லவனெல்மேலியில் வெருவச்செருவேல் வலங் கைப்பிடித்த, படைத்திறற் பல்லவர்கோன்."

(திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி.)

இழந்தானென்று அச்சாஸனத்திற்சொல்லப்படுகின்றது.† இவ்வாறு திருமங்கைமன்னன்குறித்த மண்ணை, நெல்வேலிப்போர்கள் உதயேந்திரசாஸனத்தில் நந்திபோதனைச் சார்ந்ததாகக் காணப்படுதலோடு, பாண்டியன் "காளிதுர்க்கம்" என்னும் மலையரணிழந்தசெய்தி, "தேம்பொழிற் குன்றெயிற் றென்னவனைத் திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற, பாம்புடைப்பல்லவர்கோன்" என அப்பதிகத்தில் குறிப்பிக்கப்பட்டுமுள்ளது. (குன்றெயில் - மலைக்கோட்டை; இது சாஸனத்திற்கண்டபாண்டியனது "காளிதுர்க்க" மாதல்வேண்டும்) இவற்றால், திருமங்கைமன்னனாற் புகழப்பெற்ற பல்லவவேந்தன் நந்திபோதவன்மனென்றே கருதலாம். அன்றியும் அவ்வரசன் வைணவாபிமானியாகவுங் காண்டலால், அவன் ஆழ்வார் பாடலுக் கேற்றவனுமாகின்றான். ஆகவே, அவனிருந்த கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியமே, அவனைப்பாடிய திருமங்கையார் காலமுமாமென்று கூறலாம். ஆனால், அப்பல்லவன் இவ்வாழ்வார்க்கு முந்தினவனென்று தக்ககாரணமின்றியே சிலர் சங்கிக்கின்றனர். அச்சங்கை, நாம் அடியிற்காட்டப்போகும் வேறோர் அருமையான காரணத்தால் ஒருவாறு நீங்கக்கூடும்.

திருமங்கை மன்னனது பெரியதிருமொழி அட்டபுயகரப்பதிகத்துள்ளே;—

> மன்னவன் தொண்டையர்கோன்வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன்
> தன்வலிதன்புகழ் சூழ்ந்தகச்சி யட்டபுயகரத் தாதிதன்னைக்
> கன்னிநன் மாமதிள் வேந்தன் காமருசீர்க்கலிகன் றிகுன்றா
> வின்னிசையாற்சொன்னசெஞ்சொன் மாலையேத்தவல்லார்க்கிடமவை
> [குந்தமே.

என்னும்பாசுரம் ஈற்றிலுள்ளது. இதன் முதலிரண்டடியையும் சிறிதுற்றுநோக்கினால், தொண்டைவேந்தனொருவனால் வணங்கப்பட்ட அரசன்பெயரும், அவன் காஞ்சியிலடைந்திருந்த பிரதாபமும் கீர்த்தியும் உரைக்கப்படுதல் விளங்கும். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம், இப்பாசுரத்தில்வரும் "வயிரமேகன்" என்பது "சக்கரவர்த்திக்குப்பெயர்" என்று கூறுகின்றது. இவற்றால் 'வயிரமேகன்' என்பான் ஒரு பெருவேந்தனென்றும், அவன் கச்சியையாண்ட அரசனால் வணங்கப்பட்ட பெருமையையுடையானென்றும், அவன் கீர்த்திப்பிரதாபங்கள் காஞ்சிமண்டலத்திற் பரவின என்றும் தெளிவாகின்றன. அட்டபுயகரம் காஞ்சியைச்சார்ந்ததென்பதைக்

† Salem District Mannual, Vol. II, pp. 356.

குறிக்கவந்தஆழ்வார், அக்கச்சியை மற்றப்பெருமைகளால் அலங்கரிக்காது "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்று பெருமைப்படுத்தலால், அஃது அவர்காலத்து நிகழ்ச்சியென்று கருதலே நேராகும். இனிஇவ்வயிரமேகனென்பான் யாவன்? எக்காலத்தவனென்பதை ஆராய்வோம்.

இராஷ்டிரகூடநாட்டு மான்யகேதயாதவவரசர்கள், மேலைச்சளுக்கியரைக் கி. பி. எட்டாநூற்றுண்டின் மத்தியில் முறியடித்தோட்டிய பெருவலிபடைத்த வகுப்பினர். இவ்வரசர் சரித்திரம் தக்க ஆதாரங்களுடன், மிஸ்டர் பிளீட் (Mr. Fleet), டாக்டர் பர்ஜஸ் (Dr. Burgess) முதலிய பண்டிதரால் வெளியிடப்பெற்ற நூல்களிற் சொல்லப்படுகின்றது. இவ்வரசர் வடபுலத்தினின்று வந்தவர்கள். இவர்களில் ஆறும் அரசனாகிய தண்டிவன்மன் கி. பி. 753-754-வரை ஓராண்டே ஆட்சிபுரிந்தவனென்று குறிக்கப்பட்டுள்ளது. இவன் "வயிரமேகன்" என்றும் அழைக்கப்படுவானென்பது மிஸ்டர் லூயிஸ் ரைஸ்(Mr. Lewis Rice) துரை வெளியிட்டசாஸனமொன்று தெளிவாக்குகின்றது (Indian Antiquery, XII. 11). ஆயின் வடநாட்டானாகிய இவ்விராஷ்டிரகூட அரசனுக்கும் தென்னாட்டுக் காஞ்சிபுரத்துக்கும் சம்பந்தமென்னையென்று சிலர் உசாவவரலாம். இவ்வயிரமேகன் அரசர்பலரை வென்றவனெனப்படுதலோடு இவன் காஞ்சிப்பல்லவனைப் போரில்வென்று, அந்நகரைப் பிடித்தவ னென்றும் இவன் சரித்திரம் குறித்தலால், இத்தண்டிவன்மனாகிய வயிரமேகனே, திருமங்கையாழ்வார் குறித்த "வயிரமேகன்" என்பதில் ஐயமில்லை. இவ்ன் சரித்திரத்துக்குப் பொருந்தவே, அவ்வாழ்வார் வாக்கினுள் "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்" என்பது வயிரமேகன் பல்லவஅரசனைவென்றவனென்பதையும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்பது இவ்வரசன் கச்சிநகரைப் பிடித்த பெருவலியாற் கீர்த்திபெற்றவ னென்பதையும் குறிப்பால் விளக்குதல் காண்க. "தொண்டையர்கோன்" என்பது தொண்டைநாடாண்ட பல்லவர்க்கும் வழங்குவதென்பது, நந்திக்கலம்பக முதலிய நூல்களாற் றெளிவாம். இனி வயிரமேகனாகிய தண்டிவன்மன் வழியினர்சிலரும், பல்லவரோடு பகைமைகொண்டவராகக் கா

ணப்படுகின்றார். காஞ்சியை, அவ்வயிரமேகன்பிடித்தகாலம் 753-754-க்குள் ஆகவேண்டுமாதலால் அக்காலத்தை மிகவும் ஒட்டியே ஆழ்வார் தம் அட்டபுயகரப்பதிகத்தையும் அருளினரென்று சொல்லலாம். இவ்வயிரமேகனென்னும் பெயர் வேறரசர்க்கு வழங்குவதாக எம்மாராய்ச்சியிற் புலப்படவில்லை.

இனி, 754-ல் இருந்த வயிரமேகனல் வெல்லப்பட்ட பல்லவவேந்தன்760-வரை ஆட்சி செய்தவனாகச் சொல்லப்படும் நந்திபோதவன்மனாதல் வேண்டும். பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் கண்ட செய்கைகளுடையவன், அந்நந்திபோதனென்று முன்புகாட்டினேமாதலால், திருமங்கையாழ்வார் ஏறக்குறையத் தங்காலத்துச் செய்திகளையே அப்பதிகத்திற் குறித்திருக்கிறாரென்று பெறப்படுகின்றது. அந்நந்தி செய்கைகள், ஆழ்வாரால், "செருமேல் வியந்தன்று சென்றான்" "செருவின் முனநாட் பரந்தவன்" "பண்டோர்கால் வளைத்தான்" எனப்பழைமையுடையனவாகக் காட்டப்படுதலால், நீடித்த ஆட்சியுடையவனாகத் தெரியும் அப்பல்லவவேந்தனது இளமைக்கால நிகழ்ச்சிகளே பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் குறிக்கப்பட்டவையென்றும் ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஒருகால், இப்பதிகத்திற் சொல்லப்பட்ட பல்லவவேந்தன், நந்திபோதன் அல்லனென்று பின்னாராய்ச்சியால் மாறுவதாயினும், திருமங்கையார் காலத்தவன் வயிரமேகனென்னும் எம்முரை மாறுபடாததாம்.

இனிச்சிலர் கூறுவதுபோல், திருமங்கைமன்னன் கி. பி. 11-ம் நூற்றாண்டுக்கும் பிந்தினவராயின், பல்லவராஜ்யத்தைத் தலைகவிழச் செய்த பராந்தகன்(I) முதலிய பிரபலவரசர்பெருமைகளைத் தம்பாசுரங்களில் அமைக்காது, அவர் பல்லவர்பெருமைகளையே தம்பதிகங்களில் அடிக்கடி எடுத்தோதுவதும், அதினும் "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன், தன்வலி தன் புகழ்சூழ்ந்தகச்சி" எனக்கச்சியைப்புகழ்தற்கு, வேண்டாததும் பிற்காலத்துப்பிரசித்தமில்லாததுமான இராஷ்டிரகூடன் செய்தியைத் தம்பாசுரத்தில அருமைபாராட்டுவதும் எக்காரணம்பற்றிஎன்பதற்குத் தக்கசமாதானம் வேண்டுமன்றோ! இன்னும் அச்சிலர், திருமங்கைமன்னன் அருளிச்செயல் இராமாநுஜர்நாளில் வழக்குப்பெரிது

டையதன்றென்றுங் கூறுவர். உடையவர் காலத்தவரென்று தெளிந்த அமுதனர், தம் இராமாநுஜ நூற்றந்தாதியில் "கலிமிக்கசெந்நெற் கழனிக்குறையல் கலைப்பெருமான், ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளந்தடித்ததனல், வலிமிக்கசீயம் இராமாநுஜன்" "குறையற்பிரானடிக்கீழ் விள்ளாத வன்பன் இராமாநுஜன்" "நீலன்றனக்கினியானை" என, பெரியதிருமொழியிடத்தும், அதனையருளிய திருமங்கைமன்னனிடத்தும் உடையவர்க்கிருந்த அளவிலீடுபாட்டைவிளக்கியிருத்தலால், அன்னோர்கூற்றுச் சிறிதும் பொருந்தாமைகாண்க. இவ்வாறெல்லாம் அவர்எழுதற்கு, நம்மாழ்வார்காலம் 11ம் நூற்றாண்டென்று ஆதியில் தாம்சங்கற்பித்துப்புகுந்தமையால், ஆழ்வாரெல்லார்க்கும் பிந்திய திருமங்கைமன்னன்முதலியவர்க்கு ஆளவந்தார் காலத்தைக்காட்ட நேர்ந்ததேயன்றி வேறில்லை. நம்மாழ்வார் பெரியாழ்வாரிருவரும் முறையே தம் வாக்காலும்,சரித்திரத்தாலும் கி. பி. எழாநூற்றாண்டின் தொடக்கத்தவரென்று காட்டிக்கொள்வதையும், அவருட் பெரியாழ்வார் அந்நூற்றாண்டிலிருந்த "நெடுமாறன்" என்னும் அரசனைத் தம்பதிகத்தில் ஓதுதலையும் நாம் "பெரியாழ்வார் காலநிருணயம்" என்னும் விஷயத்திற் பரக்கவிளக்கியிருக்கிறோம்.

இதுகாறுங் கூறிவந்தவைகளால், திருமங்கைமன்னன் கி. பி. எட்டாநூற்றாண்டின் மத்தியில் விளங்கிய நந்திபோதவன்மன், இராஷ்டிரகூடவேந்தனான வயிரமேகன் (தண்டிவன்மன்)- இவ்விருவரது காலத்தவரே என்பதும், ஆகவே, அவ்வாழ்வாருடனிருந்த தொண்டரடிப்பொடிகளும், திருப்பாணாழ்வாரும் அதேகாலத்தவராவரென்பதும் விளங்கியவாறு காண்க. இவற்றால் இடைத்தொகுதியினராகிய நம்மாழ்வார், பெரியாழ்வார் முதலியோர் எழாநூற்றாண்டின் முற்பகுதியினராக, இறுதியினிற்கும் திருமங்கைமன்னன்முதலியோர் அவர்க்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின் எழுந்தருளியிருந்தவரென்பது பலையிலக்காயிற்று.

மு. இராகவையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.